# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று: 14 சுகந்தம் : 50 (ஆடி – புரட்டாதி) : 2021





50

# தென்றலின் தேடல்

பாகம் - 01

க. கிருபாகரன்



100/=




தேசிய பல்சுவைத் தொகுப்ப சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரில் அமைதியான சூழலில் புதுப் பொலிவுடன்லோட்டஸ் மஹால் தங்குமிடம்!

## (LOTUS MAHAL LODG)




வெளியிடங்களில் இருந்து வருவோர்க்கும்,
விற்பனைப்பிரதிநிதிகளுக்கும்,
மாணவர்களுக்கும் உகந்த வகையில்
நியாயமான விலையில் வசதியான அறைகள்
நாளாந்தம/வாராந்தம்/மாதாந்தம்
என AC/NON AC வசதிகளுடன்
வாடகைக்குப் பெற இன்றே நாடுங்கள்.



இல-61/2, யாட் வீதி,
கல்முனை.
தொலைபேசி:- 0770165133/
0760824059
*Email:- kpkanthaswamy @gmail.com*
*Gmail:- accounts.google.com*



AD/0047

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் : 06.04.2008

# தென்றல்

# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077– 6983597
பெக்ஸ் : 065 – 2227542
Emaill: kirupabatticaloa@yahoo.com
இணையம் : www.thendralbook.com

**ஆசிரியர் / வெளியீட்டாளர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு. தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ. கேபாலபிள்ளை
திருமதி. கவிதா கிருபாகரன்
கலாபூஷணம் ஆ. அரசரெத்தினம்
செல்வி. த. செல்வராணி

**ஓவியம்**
சி. புரவர்த்தனி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரை பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)**

## உள்ளே .....

- நானும் தென்றலின் தேடலும் (ஆசிரியர் கருத்து ) 02

## தேடலில்.....

1.ஆ.மு.சி.வேலழகன் 03
2. சி. சோமசுந்தரம் 05
3. வித்துவான் க.செபரத்தினம் 07
4. மூ.அருளம்பலம் 10
5. மாஸ்டர் சிவலிங்கம் 14
6. செ.ஞானப்பிரகாசம் 18
7. தாழை.செல்வநாயகம் 20
8. திருமதி ஜெகதீஸ்வரி நாதன் 22
9. பருத்தியூர் பாலவைரவநாதன் 25
10. கோவிலூர் செல்வராஜன் 28
11. க.சபாரெத்தினம் 31
12. த.மோகனப்பிரியன் 33
13. உடப்பூர் வீரசொக்கன் 36
14. வெலிகம ரிம்சா முகம்மத் 39
15. திருமதி ஜெயந்திமாலா குணசீலன் 45
16. மு.கணபதிப்பிள்ளை 47
17. க. கிருஷ்ணப்பிள்ளை 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் - "தென்றலின் தேடலும்"

**"தேடல்"** என்பதெல்லாம் ஒன்றுதான் என்றாலும், எல்லாத் தேடல்களும் ஒன்றில்லை. ஒவ்வொரு தேடலும் தன்னளவில் வேறுபட்டு இருப்பது. ஏனெனில் தேடலுக்கு ஆதாரம் வாழ்க்கை தான். வாழ்க்கை யாருக்கும் ஒன்றில்லை. ஒன்றில்லை என்பதோடு, வித்தியாசப்பட்டு இருப்பது.

இவ்வாறான **"தேடலின்"**- ஊடாக இலங்கையில் மாத்திரமின்றி, நாடு கடந்தும் - தேசம் கடந்தும் வாழுகின்ற ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளந் தலைமுறையினருக்கு அடையாளப்படுத்தி, அவர்களது ஆற்றல்களை வெளிக்கொணர முடிந்துள்ளது. ஈழத்து இலக்கிய - சஞ்சிகை- இசை- நாட்டிய- நாடக- கிராமிய வைத்தியத்துறை போன்றவற்றுக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"**– அமைந்தது.

இதனை ஆவணப்படுத்த வேண்டியதன் தேவை கருதி, எமது **"தென்றலின்"**–ஐம்பதாவது இதழை **"தென்றலின் தேடலாக"**– வெளிக் கொணர்ந்துள்ளோம். இவற்றை வெளியிடுவதிலுள்ள செலவு காரணமாக இவ்விதழில் முத்தான 17 கலைஞர்களின் விபரங்களை **"தென்றலின் தேடல் பாகம்–01"**– இன் ஊடாக முழுப்பிரசவமாகத் தவழ விடுகிறோம்.

இத் **"தேடல்களின்"**– பாகங்கள் பல எதிர்காலத்தில் சூரியனைப் போல் சுடர் விட்டுத் தரணியெங்கும் பிரகாசமாக ஒளிரும். இதற்கு எமது அன்பான வாசகர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர் கள், அனுசரணையாளர்களின் உதவியைத் தென்றல் வேண்டி நிற்கிறது.

**என்றென்றும் அன்புடன்**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ. மு. சி. வேலழகன்



கவிதை நூலுக்கான ("செங்காந்தள்") இலங்கை சாகித்திய விருது பெற்ற கவிஞர் ஆ.மு.சி. வேலழகன் இலங்கை போக்குவரத்துச் சபையில் சாரதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1972ஆம் ஆண்டு முதல் இன்று வரை பதின்மூன்று (13) நூல்கள் எழுதி வெளியிட்டுள்ள இவரது சாதனையை **"தென்றல்"** பாராட்டுவதில் பேருவகை அடைகிறது.இவர் திருப்பழுகாமத்தில் பிறந்து, தனது வாழ்நாளின் பெரும் பகுதியை இலக்கியத்துறைக்காக அர்ப்பணித்துள்ளார்.

## இவர் எழுதிய நூல் பட்டியல்

1.தீயும், தென்றலும் (கவிதைத்தொகுதி -1972)
2. சாதியா? சதியா? (உரைச் சித்திரம் -1973)
3. உருவங்கள் மானிடராய் (கவிதைத் தொகுதி- 1994)
4. கமகநிலா (சிறுகதைத் தொகுதி) -1996)
5. வேலழகன் கவிதைகள் -1996)
6. மூங்கில் காடு (சிறுகதைகள் - 2001)
7. விழியும் வழியும் (நாவல் - 2004)
8. சில்லிக் கொடி ஆற்றங்கரை (நாவல் - 2004)
9. கோடாமை சான்றோர்க்கனி (நாவல் 2006)
10.செங்காந்தள் (கவிதைகள் - 2006)
11. இவர்கள் மத்தியிலே (நாவல் - 2006)
12. கேட்டுப் பெற்ற வரம் (சிறுகதைகள் - 2007)
13. திருப்பழுகாமம் ஒரு சுருக்க வரலாறு (ஆய்வு நூல் - 2008)

இவற்றுள் **"செங்காந்தள்"** கவிதை நூல் சாகித்திய விருது பெற்றது. அத்தோடு **"மூங்கில் காடு"** நாவலை தமிழ் நாடு பச்சையப்பன் கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் இளங்கோ ஆய்வு செய்து M.Phil பட்டம் பெற்றுள்ளார். **"சில்லிக் கொடி ஆற்றங்கரை"** நாவலை தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் இரா. கோவிந்தன் ஆய்வு செய்து M.Phil பட்டம் பெற்றுள்ளார். இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் சில நூல்களை ஆய்வுக்கு கொடுத் துள்ளார்.

அடுத்து அவர் ஆரம்பித்து நடாத்திய மன்றங்களின் விபரம் வருமாறு:-

1958 - திருப்பழுகாமம் கண்ணகி கலைக்கழகம்
1963 - அமிர்தகழி புன்னைச்சோலை - முரசொலி நாடக மன்றம்
1965 - திருக்குறள் முன்னணிக்கழகம்
1970 - மட்டுநகர் தமிழ் கலாசார மன்றம்
1971 - மட்டுநகர் திருக்குறள் முன்னணிக் கழகம்
1981 - திருப்பழுகாமம் திருக்குறள் முன்னணிக் கழகம்
1985 - மட்/இ.போ.ச கலாசார மன்றம்
1988 - படுவான்கரை விவசாயிகள் அபிவிருத்திக் கழகம்
1989 - அம்பாறை மகிந்தபுர திருக்குறள்
1997 - மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை
2004 - வாழைச்சேனை திருக்குறள் முன்னணிக் கழகம்.

இவ்வாறாக பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இன்று வரை தொடர்ந்து எழுதி வரும் வேலழகன் எழுத்தாற்றலோடு, சமூகப் பணியிலும் தனது ஈடுபாட்டை செலுத்தி வருவதை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின் றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பி சோமசுந்தரம்



பல்வேறு திறமைகளின் ஊற்றான களுதாவளையில் பிறந்து, அரும் பணியாற்றிக் கொண்டிருக்கும் சின்னத்தம்பி. சோமசுந்தரத்தின் சேவையை - பணியை களுதாவளை கிராமியக் கலாமன்றம் பாராட்டி **"ஆர்மோனிய வித்தகர்"** விருது வழங்கி அண்மையில் கௌரவித்தது.

இவரின் சாதனைகள் இன்னும் இச் சமூகத் துக்கு கிடைக்க வேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.

இவர் 1926.06.26 ஆம் நாளில் அன்னை மடியில் அவதரித்து. தனது ஆரம்பக்கல்வியை களுதாவளையில் பெரிய கல்லாற்றைச் சேர்ந்த பூபாலபிள்ளை தலைமையாசிரியரின் கீழ் மண்டூரைச் சேர்ந்த ஆனந்தநாயகத்திடம் 8ஆம் தரம் வரையே கற்றதாக தெரிவித்தார்.



தனது குடும்ப நிலை காரணமாக இத்தோடு (தரம்8) கல்விக்கு முழுக்கு போட்டு விட்டு விவசாயம், வெற்றிலை நடல், வெற்றிலை வியாபாரம், மேசன் போன்ற தொழில்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டார்.

**கலை, இலக்கிய துறைகளில் ஈடுபாடு:-**

பாடசாலை காலத்தில் மார்க்கண்டேயர் நாடகத்தில் - மார்க் கண்டேயர் பாத்திரமேற்றும், கோமதி நாடகத்தில் - வைத்தியர் பாத்திரமேற்றும் நடித்ததாகவும் பெருமையுடன் கூறும் அவர், 25 சதரிக்கட் காட்சிக்காகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நாடகங்கள் காண்பிக்கப்பட்ட தாகவும் எடுத்துக் கூறினார்.

அத்தோடு தான் பிள்ளையார் கதை. பஞ்சபுராணம், திருக்குளிர்த்திப் பாடல்களை இசையுடன்பாட இந்தியாவைச் சேர்ந்த ஞானரெத்தினம் தனக்கு ஆர்மோனியம் இசைக்க வழிப்படுத்தியதாகவும் ஆனந்தக் கண்ணீர் ததும்ப மெல்லிய குரலில் கூறியது என்னை பெருமிதத்தில் ஆழ்த்தியது.

**"மாஸ்டர்"** ஆர்மோனியப் பெட்டியை காண்பித்த அவர். தான் வில்லிசை, நாட்டிய நாடகம், கூட்டுப் பிரார்த்தனை போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு இசை விருந்தளித்துள்ளதாக தெரிவித்தார்.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவங்களின் போது தான் தனது கூட்டுப்பிராத்தனைக் குழுவினருடன் இணைந்து பக்திப் பாடல்களை பக்தர்கள் ரசிக்கும்படியாக இசைத்ததையும் **"தென்றல்"** உடன் பகிர்ந்து கொண்டார்

இவ்வாறாக தள்ளாத வயதிலும் பத்திரிகை வாசித்து தனது அறிவாற்றலை வளர்த்து வருவதை நேரடியாகவே கண்ணாரக் கண்டேன். அவரது கலைப்பணி தொடரட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான், தமிழ்ஒளி, கனகரெத்தினம் செபரத்தினம்



**வி**த்துவான். தமிழ்ஒளி கனகரத்தினம் செபரத்தினம் பழந்தமிழர் பதிகளில் ஒன்றாகிய தம்பிலுவில் கிராமத்தில் 24.09.1930 இல் பிறந்தார். இவர் கல்வி கற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராகி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்று அதிபரானார்.

இக் காலப்பகுதியில் இவர் பாடசாலை முகாமைத்துவ விடயங்களிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். இவரது மாணாக்கர்களில் பலர் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் இன்னும் பல்வேறு பதவிகளில் தம்மை நிலை நிறுத்தியுள்ளமை இதற்குச் சான்றாக அமைகிறது.

தனது இல்லற வாழ்க்கைத் துணையை நீர்வளமும், நிலவளமும் நிறைந்த திருப்பழுகாமம் கிராமத்தில் தேர்ந்தெடுத்தார். இவருக்கு - இவரது கல்வி, கலை, இலக்கியப்பணிக்கு உரம் சேர்க்க வாழ்க்கைத் துணையான நேசம்மா செபரத்தினம் இருந்ததை- இருப்பதை எண்ணிப்பார்க்கிறேன்.

இவ்வாறாக கடந்த போர் அனர்த்த காலத்தில் திருப்பழுகாமம் ஊர் மக்களின் **"ஊர்க்காவலன்"** ஆக பணிபுரிந்ததையும் கண்ணாரக் கண்டேன்.

தனது சொந்த விடயங்களுக்காக நாட்டை விட்டு இடம்பெயர்ந்து கனடா நாட்டுக்கு புலம் பெயர்ந்து சென்றார். அங்கும் எமது கலை, இலக்கியப் பண்பாட்டுக்காக தன்னை அர்ப்பணித்தார். இதற்கு கனடாவில் வெளிவரும் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளி வந்த தமிழ்ச்சான்றோர்கள், தமிழ் இலக்கியம் சார்ந்த கட்டுரைகள் சான்று பகருகின்றன.

இந்நிலையிலேயே அண்மையில் தான் நேசிக்கும் திருப்பழுகாமம் கிராமத்துக்கு விஜயம் செய்த வித்துவானையும், அவரது பாரியாரையும் திருப்பழுகாமம் கிராமமக்கள் கிராம மத்திய இடத்திலிருந்து மங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியம் முழங்க, திருப்பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம் வரை ஊர்வலமாக அழைத்துச்சென்று பெரு வரவேற்பளித்தனர். அங்கு பல்வேறு முக்கியஸ்தர்களின் பாராட்டுரைகளும், மாணவிகளின் நடனங்களும் இடம்பெற்றன.

**வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் எழுதி வெளியிட்ட நூல்கள்**

01. வாழையடி வாழை - 1962 இல்

02. விபுலானந்த அடிகளார் வாழ்வும், வளமும் - 1994இல்

03. நயனங்கள் பேசுகின்றன- (சிறு கதைத் தொகுதி) - 2000இல்

04. ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் -2002இல்

05. கிழக்கிலங்கை மண்ணின் புகழ் பூத்த மைந்தர்கள் - பகுதி - II ( 2003 இல் தொகுப்பு நூல்.

06. உள்ளக் கமலம் (கட்டுரைத் தொகுதி)- 2010இல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உள்ளக்கமலம்" நூல் வெளியீட்டில் இடம்பெற்ற கலை நிகழ்வு.

**பெற்ற பரிசில்கள்**

01. 1993இல் சாகித்திய விழா-தமிழ்ஒளி
02. 2004இல் கிழக்குப்பல்கலைக் கழகம் - இலக்கிய முதுமாணி
03. 1998இல் கனடா சிறுகதைப்போட்டி - முதலாம் இடம்
04. 1999இல் கனடா சிறுகதைப்போட்டி - நான்காம் இடம்
05. 1999 இல் கனடா - செந்தாமரை சிறுகதை - பரிசில்
06. ஈழத்துத் தமிழ் சான்றோர்கள் -புதினம் லண்டன், 50,000/= பணப்பரிசு.
07. கனடா எழுத்தாளர் மையம் -நிறை குடம் விருது
08. கனடா எழுத்தாளர் மையம் -75ஆவது வயது வித்துவரத்தினம் விருது.
09. கனடா நாடக விழா -தங்கப்பதக்கம்

இவ்வாறாக தனது எண்பதாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் வித்துவான் தமிழ் ஒளி க. செபரத்தினத்தின் கலை, இலக்கியச் சேவை இச் சமூகத்துக்கு இன்னும் கிடைக்க வேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம்
# மூத்ததம்பி அருளம்பலம்



ஆரையம்பதியைச் சேர்ந்த மூத்ததம்பி அருளம்பலம் (ஆரையூர் அருள்) தொடர்ந்து கலை, இலக்கியத் துறை வளர்ச்சிக்காக புரிந்து கொண்டிருக்கும் பங்களிப்புக்காக இலங்கை அரசாங்கத்தின் கலாசார அமைச்சு அண்மையில் அவருக்கு **"கலாபூஷணம்"** விருது வழங்கிக் கௌரவித்தது.

இவ்வாறு விருது பெற்ற மூத்ததம்பி அருளம்பலத்தை (ஆரையூர் அருள்) **"தென்றல்"** மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறது. இவர் ஆரையம்பதியில் 1949.09.19 ஆம் நாளில் மூத்ததம்பி - அன்னம்மா தம்பதிகளுக்கு மூன்றாவது புதல்வனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மட்/ ஆரையம்பதி இராமகிருஸ்ண வித்தியாலயத்திலும், தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மட்/ கல்லடி - உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றார்.



**கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் விருதினை ஆரையூர் அருளிடம் கையளிக்கிறார்.**

தான் கற்ற கல்வியை மாணவச் செல்வங்களுக்கு ஊட்டும் பொருட்டு 1973 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட கணித ஆசிரியரானார். தனது அயராத உழைப்பினால் பிற்காலத்தில் அதிபர் பரீட்சையில் சித்தி பெற்று சில பாடசாலைகளில் முகாமைத்துவ தகமைசார் அதிபராக பணிபுரிந்தார். இவ்வாறாக தரம் 01 அதிபர் சேவையில் 2009ம் ஆண்டுடன் ஓய்வு பெற்றார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெற்ற விருதுகள்

01. 1997 ஆம் ஆண்டு மண்முனைப் பற்று பிரதேச செயலக சாகித்திய விழாவில் **("கூத்துக் கலைஞர் அண்ணாவியார்")** பணப்பரிசு, சான்றிதழ் பெற்றமை.

02. 2002ஆம் ஆண்டு புதுக் குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் வழங்கிய **"கூத்துக் கலைஞர்"** பட்டம்.

03. 2009ஆம் ஆண்டு சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பு வழங்கிய **"கீர்த்தி சிறி" (தேசிய விருது)**

04. அதே ஆண்டில் மண்முனைப் பற்று கலாசாரப் பேரவை நடாத்திய கலைஞர் கௌரவிப்பில் வழங்கிய **"நாட்டுக்கூத்து கலைஞர் விருது"**

05. அத்தோடு 2009ம் ஆண்டு ஆரையம்பதி நட்புறவுக் கழகம் வழங்கிய **"கலைஞானி விருது"**

06. 2010ஆம் ஆண்டில் கிராமியக் கலைக்காற்றிய சேவைக்காக முதலமைச்சரால் வழங்கப்பட்ட **"முதலமைச்சர் விருது"**

07. அதே ஆண்டில் (2010) இலங்கை அரசாங்கத்தின் கலாசார அமைச்சர் ஏ.ஈ. ஏக்கநாயக்காவினால் வழங்கப்பட்ட **"கலாபூஷணம் விருது"**

## இவரின் கவிதைகள் களங்கண்ட இதழ்கள்

01. கிழக்கொளி (1992) **"பாரதி மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று"**

02. கிழக்கொளி (1999) **"வித்தகன் விபுலானந்தன்"**

03. ஒளி (ஆடி 1996) **" ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்......."**

04.**"தமிழ்மணி அன்புமணி"** பாராட்டு விழா சஞ்சிகையில் **"இசைபாட வாருங்கடி எங்கள் அன்புமணி"**

05. சிகரம் சஞ்சிகை 2003இல் - **"மண்முனைப் பற்றுச் சிறப்பு"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. 2009 இல் **"மண்முனைப்பற்றுச் சாகித்திய விழா வெளியீட்டுக்கவி."**

07. கதிரவன் சஞ்சிகையில் 2009இல் **"மண்முனைப் பற்றுச்சிறப்பு."**

08. 2010 இல் சிறுவர் உரிமைகள் கும்மிப் பாடல்கள்.



15th December 2010 at John De Silva Memorial Hall Colombo.

## சிறுகதைகள்

01. 1986 ஆம் ஆண்டு பட்டிருப்புக் கோட்டமட்டத்தில் **"அவள்"** சிறுகதைக்கு முதல் இடம் கிடைத்தது.

02. 1992 ஆம் ஆண்டு மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம் நடாத்திய நாடகப் போட்டியில் **"தியாக தீபம்"** சமூக நாடகத்துக்கு முதலிடம் கிடைத்தது.

03. 2002 ஆம் ஆண்டு மண்முனைப்பற்றுக் கோட்டமட்டம் நடாத்திய சிறுவர் நாடகப் போட்டியில் **"உண்மை விளங்குது"** சிறுவர் நாடகம் 2ம் பரிசு பெற்றது.

## நாட்டுக் கூத்து

01. 1974ஆம் ஆண்டு **"வள்ளி திருமணம்"** வட மோடி நாட்டுக் கூத்து பொலநறுவை முத்துகல் மகாவித்தியாலயத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

02. 1981 ஆம் ஆண்டு **"வாலிவதம்"** வடமோடி நாட்டுக்கூத்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

03. 1983 ஆம் ஆண்டு பொத்துவில் மெதடிஸ்தமிஷன் வித்தியாலயத்தில் **"பணச்செருக்கு"** வடமோடி நாட்டுக் கூத்து அரங்கேறியது.

04. 1992ஆம் ஆண்டு அரங்கேறிய **"வழிதவறிய வஞ்சி"** வடமோடி நவீன நாட்டுக் கூத்து.

05. 1993ஆம் ஆண்டு அரங்கேறிய **"அனுமன் கண்ட சீதை"** வடமோடி நாட்டுக்கூத்து

06. 1994ஆம் ஆண்டு அரங்கேறிய **"மங்கள தீபம்"** வடமோடி நாட்டுக் கூத்து

07. 1997ஆம் ஆண்டில் மண்முனைப்பற்று பிரதேச செயலகம் நடாத்திய தென்மோடிக்கூத்துப் போட்டியில் **"சுந்தரி விடு தூது"** முதலாம் பரிசு கிடைக்கப்பெற்றது.

08. அதே ஆண்டில் (1997 இல்) வடக்கு - கிழக்கு மாகாணசபை நடாத்திய தமிழ் மொழித்தினப் போட்டியில் **"சுந்தரி விடு தூது"** தென்மோடிக் கூத்துக்கு முதலாம் பரிசு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அத்தோடு 1998ம் ஆண்டு **"இரணிய சங்காரம்"** தென்மோடி நாட்டுக்கூத்துக்கு முதலாம் பரிசு கிடைக்கப்பெற்றது.

10. 2002ஆம் ஆண்டு மட்டக்களப்பு வலயம் நடாத்திய போட்டியில் **"குருதட் சணை"** வடமோடி நாட்டுக் கூத்துக்கு இரண்டாம் பரிசு கிடைக்கப் பெற்றமை.

## இறுவட்டு வெளியீடு

1. 1992ம் ஆண்டு வெளியிடப்பட்ட (ஆரையம்பதி சிவனேஸ்வரர் அலய காவடி, ஊஞ்சல் இறுவட்டு)
2. 1993இல் வெளியிடப்பட்ட ஆரையம்பதி கண்ணகி அம்பாள் கும்மி. தாலாட்டு பாடல்கள் இறுவட்டு.
3. 1994இல் வெளியிடப்பட்ட ஆரையம்பதி பேச்சியம்பாள், காவடி, கும்மி, தாலாட்டு, கரகம் இறுவட்டு
4. 1995ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட செல்வாநகர் காளியம்மன் தாலாட்டு, கும்மி, ஆக்கப்பாடல் இறுவட்டு.
5. 1996ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆரையம்பதி வம்மிக்கேணி மாரியம்மாள் கரகம், காவடி, தாலாட்டு . ஆக்கப்பாடல் இறுவட்டு.
6. 1997 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோளாவில் மாரியம்மன் காவடி, கும்மி ஆக்கப்பாடல் இறுவட்டு.
7. 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோளாவில் மாரியம்மன் காவடி, கும்மி இறுவட்டு.
8. அத்தோடு (2001இல்) வெளியிடப்பட்ட கல்லடி உப்போடை பேச்சியம்மாள் காவடி, கும்மி, தாலாட்டுப் பக்திப்பாடல் இறுவட்டு.
9. 2002ம் ஆண்டு வெளியிடப்பட்ட மஞ்சந்தொடுவாய் வீர பத்திரர் காவியம், புதுக்குடியிருப்பு கண்ணகியம்மாள் காவடி, கும்மி. தாலாட்டு பக்திப்பாடல்கள் இறுவட்டு.
10. 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புன்னைச்சோலை காளியம்மாள் காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள் அடங்கிய இறுவட்டு.
11. 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்லடி - உப்போடை பேச்சியம்மாள் காவடி, கும்மி, பக்திப்பாடல்கள் அடங்கிய இறுவட்டு, புத்தகம்.

இவற்றோடு தனது ஆக்கங்களை தேசிய ரீதியாக வாழும் எம் உறவுகளும் அறியும் வகையில் வீரகேசரி, தினக்குரல், தினகரன் பத்திரிகைகளில் பல்துறை சார்ந்த ஆக்கங்களை எழுதியுள்ளார். இவரது எழுத்தாக்கல் பணிகள் தொடரட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைமாமணி
# மாஸ்டர் சிவலிங்கம்



மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த மாஸ்டர் சிவலிங்கம் தனது 77ஆவது வயதிலும் குழந்தைகளையும், பெரியவர்களையும் மகிழ வைக்கும் உன்னத. மகத்தான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை நேரடியாகக் கண்டு கொண்டிருக்கின்றோம். அவரின் இப்பணி தொடர வேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகின்றது.

மாஸ்டர் சிவலிங்கம் கதை சொல்லும் போது அந்தப் பாத்திரமாக மாறி உரையாடுவதும். அவ்வப்போது நகைச்சுவை சிதறல்களை அள்ளி வீசுவதும் இயல்பானதே.

இவர் இதுவரை 125 வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு மேல் நடத்தியுள்ளார். ஆனாலும் அவர் நடத்தும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி ஏனையோர் நடத்தும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை விட வித்தியாசமானது.

**பள்ளிப்பருவம்**

மாஸ்டர் சிவலிங்கம் மாணவனாக இருந்த போதே **"மாஸ்ரர்"** பட்டம் அவர் பெயருடன் ஒட்டிக்கொண்டதாகவும், தனது கல்வியை மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் (தற்போது இந்துக்கல்லூரி) கற்றதாகவும் தெரிவித்தார்.

நகைச்சுவை ஆற்றலால் மாணவர்களை மட்டுமல்லாது ஆசிரியர்களையும் தனது பக்கம் ஈர்க்கும் வல்லமை படைத்தவராக இருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

அவர்களில் முக்கியமானவர் அமரர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை எனவும் அவர் தனக்கு மனம் நெகிழ்ந்து வழங்கிய பட்டம் **"நகைச் சுவைக் குமரன்"** இன்றுவரை தன்னுடன் இரண்டறக் கலந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பள்ளிப்படிப்பு முடிந்த பின் கார்ட்டூன் சித்திரத் துறையில் பயிற்சி பெறுவதற்காக அவர் தமிழகம் சென்றார். அங்கு சென்றதும் பல்வேறு கவின்கலைகளும் அவரை ஈர்த்தன. பல குரலில் பேசுதல் (Mimicry) நடிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை, வில்லுப்பாட்டு, கதாப் பிரசங்கம் எனப்பல கலைகள் அவரை ஈர்த்தன.


கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றப் பொன் விழாவில் மாஸ்டர் கௌரவிக்கப்படுகிறார்

அவரது திறமை சினிமா வட்டாரத்தில் தெரியவர சினிமாத் துறை அவரைத் தூண்டில் போட்டு இழுத்தது. படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி சில காட்சிகளும் நடித்த பின்னர் இங்கே வீட்டாருக்குத் தெரியவர சினிமா உலகம் பற்றிப் பயங்கரமான கற்பனைகளைக் கொண்டிருந்த அவரது பெற்றோர் அம்மாவுக்குச் சுகமில்லை என்ற பொய்யான தந்தி கொடுத்து அவரை வீட்டுக்கு வரவழைத்தனர். இதனால் படிப்பு பாதியில் கைவிடப்பட் டது.

**வில்லுப்பாட்டுக்கலை**

1960களில் வில்லுப்பாட்டுக் கலை இலங்கைக்குப் புதியது. தமிழகத்தில் கொத்தமங்கலம் சுப்பு, கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் போன்ற பலருடைய வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் பற்றி அவ்வப்போது கல்கி, ஆனந்தவிகடன் சஞ்சிகைகளில் விமர்சனங்கள் வெளிவரும். ஆனால் அவற்றை நேரில் பார்த்த மாஸ்ரர் அக் கலையை இலங்கையிலும் அறிமுகப்படுத்த எண்ணினார்.

அக்கால கட்டத்தில் தமிழர் உரிமைப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. மாஸ்ரரின் வில்லுப்பாட்டுக் கலை ஒரு புதிய ஊடகமாக இருந்ததால் சமயம், பக்தி தொடர்பான விடயங்களுடன் சமூக நோக்கில் அமைந்த கலைகளும் அவரது வில்லுப்பாட்டு கதைகளில் இடம் பெற்றன. மாஸ்டருடைய நடிப்பு, மிமிக்கிரி, நகைச்சுவை முதலியன அவரது வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு பெருங்கூட்டத்தைச் சேர்த்தன.

அவரது குழுவில் கவிஞர். செ.குணரத்தினம், சித்தாண்டி சிவலிங்கம், கிருபைரட்ணம் ஆசிரியர், முழக்கம் முருகப்பா, அன்புமணி, வி.கந்தசாமி முதலியோர் நிரந்தரமாக இடம்பெற்றிருந்தனர். இக்குழு இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நிகழ்ச்சிகளை நடத்தியது.

மிகக் குறுகிய காலத்தில் 125 நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன. 100ஆவது நிகழ்ச்சி மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடை பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதன் பின் மாஸ்ரர் தானே வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்து வதை நிறுத்திக் கொண்டு பாடசாலை மாணவ, மாணவியருக்கு அக்கலை யைப் பயிற்றுவித்தார்.

மாஸ்டர் சிவலிங்கத்தின் திறமையை மதித்தவர்களில் ஒருவர் பழம்பெரும் எழுத்தாளர் எஸ்.ரி. சிவநாயகம். அப்போது புதிதாக ஆரம் பித்த தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் சிறுவர் பக்கத்தை அவரிடம் ஒப்படைத்தார். சுமார் 17 வருடங்களுக்கு மேல் தினமணி ஆசிரியர் பீடத்தில் மாஸ்ரர் பணி புரிந்துள்ளார்.

**கதை சொல்லும் உத்தியோகம்**

மட்டக்களப்பு மாநகரசபை **"கதை சொல்பவர்"** என்ற பதவி ஒன்றை உருவாக்கி அதனை மாஸ்டர் சிவலிங்கத்துக்கு வழங்கி கௌரவித்தது.

மட்டக்களப்பு மாநகர **சபையின்** கீழ் உள்ள 6 நூலகங்களுக்கு மாஸ்டர் சிவலிங்கம் காலையிலும் மாலையிலும் கதை சொல்லும் பணியை செவ்வனே செய்து வருகிறார்.

இக்காலப் பகுதியில் மாஸ்டரின் கதை சொல்லும் பணி இலங்கை வானொலி மற்றும் ரூபவாஹினி ஆகிய ஊடகங்களிலும் இடம்பிடித்தது. ரூபவாஹினி வண்ணச் சோலை நிகழ்ச்சியில் மாஸ்ரர் கதை சொல்லும் நிகழ்வு இடம்பெற்றால் அன்று வீட்டு தொலைக்காட்சியைச் சுற்றிப் பெரிய கூட்டம் கூடியிருக்கும். வானொலி சிறுவர் பகுதியிலும் மாஸ்டர் கதை சொல்லும் நாட்களில் வானொலிப் பெட்டியைச் சுற்றிப் பெருங்கூட்டம் கூடியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997ல் மாஸ்ரர் இலண்டனில் உள்ள "BUDS" நிறுவனத்தின் அழைப்பின் பேரில் இலண்டன் சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதுடன் அங்குள்ள "BUDS" நிறுவன உறுப்பினர் சிலரைக் கொண்டு ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் தயாரித்து அரங்கேற்றி விட்டார்.

"BUDS" நிறுவனத்தின் 10ஆவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள அவர் சென்றாலும் கலை அன்பர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாது அங்கு பல வைபவங்களில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியிருந்தார்.

இலண்டன் சிங்ஸ்பெரி தமிழ் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா மூதறிஞர் கணபதிப்பிள்ளை (முன்னாள் சிவானந்தா வித்தியாலய அதிபர்) நினைவு தின வைபவம் மற்றும் இலண்டன் துர்க்கை அம்மன் ஆலய நிகழ்ச்சி முதலியவற்றிலும் அவர் கலந்து கொண்டு மக்களை மகிழ்வித்தார்.

அத்தோடு இலண்டன் **"சண்றைஸ்"** (SUNRISE) வானொலியிலும் அவரது சிறப்புரை இடம் பெற்றது.

**பெற்ற விருதுகள்**

கலாபூஷணம்
நகைச்சுவைமன்னன்
நகைச்சுவைக்கும் ரன்
வில்லிசை வேந்தன்
கதைக் கொண்டல்
இலக்கிய முதுமாணி
கதை மாமணி
பல்கலைக் கலைஞன்
நடிக மன்னன்.

**எழுதி வெளியிட்ட நூல்கள்**

அன்புதந்த பரிசு
பயங்கர இரவு
சிறுவர் கதை மலர் -1
சிறுவர் கதை மலர் -2
சிறுவர் கதை மலர் -3
அரிச்சந்திரன் கதை
இளமை நினைவுகள்
சிறுவர்களுக்கான இராமாயணக் கதை
மாணவருக்கான மகாபாரதக் கதை

அன்று போலவே இன்றும் காட்சிக்கு எளியவனாய், கண்டவர்க்கு நண்பனாய், பேச்சுக்கு இனியவனாய், பிள்ளைகட்குத் தோழனாய் இன்றும் மக்கள் மனதில் வலம் வருகிறார் மாஸ்ரர் சிவலிங்கம். இவரது எழுத்தாக்கல் பணிகள் தொடரத் **"தென்றல்"** - மனம் திறந்து வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லையா ஞானப்பிரகாசம்



"நகராம் மட்டு மாநகராம்" எனும் மட்டு நகரின் பெருமை கூறும் பாடல் மூலம் அகில இலங்கைக்கே பரிச்சயமான செல்லையா ஞானப்பிரகாதசத்தை **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பேருவகை அடைகிறது. மட்டக்களப்பு - மாமாங்கம் கூளாவடி எட்டாம் குறுக்கு 1/27இல் வசித்து வரும் இவர் நாடறிந்த பாடகராவார்.

**வில்லிசை**

இளமையில் பாடசாலைப் பருவத்திலிருந்தே இசைத்துறையில் நாட்டங் கொண்டிருந்த இவர் பல வில்லிசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பாராட்டுப்பெற்றிருந்தார். 1965ஆம் ஆண்டு காலப்பகுதியிலே பாரதி இளைஞர் மன்றத்தின் மூலம் வில்லிசை, நாடகங்கள் போன்றவற்றை அரங்கேற்றினார்.

**இசைத்துறைப் பங்களிப்பு**

இவர் கதிரவன். ஆதவன், திருமலை பரமேஸ் - கோணேஸ், இதயம் போன்ற பல்வேறு இசைக் குழுக்களின் பாடகராகவிருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இசைப்பயணம் செய்துள்ளதோடு நீர்கொழும்பு. சிலாபம் முதலிய இடங்களுக்கும் சென்று பாடிப்புகழ் பெற்றிருந்தார்.

அது மட்டுமன்றி இலங்கை வானொலியின் **"அரங்கேற்றம்"** நிகழ்ச்சி மூலம் அகில இலங்கைப் புகழையும் பெற்றுள்ளார். இவர் **"மாநகராம்"** எனும் இசைத்தொகுப்பில் தான் இயற்றிப் பாடிய ஆறு பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். மேலும் சிங்கள இதிகாசக் காவியங்களான **"பட்டாச்சார, அஜாசத்த, கும்பகோச"** முதலியவற்றைத் தமி ழாக்கம் செய்தும் பாடியுள்ளார்.

பெற்ற விருதுகள்

இவரது இசைத் திறனையும் பாடும் ஆற்றலையும் பாராட்டி பல்வேறு மன்றங்களும். அமைப்புக்களும் **"இசையரசு" "மெல்லிசைத் தென்றல்"** போன்ற பல்வேறு பட்டங்களை வழங்கியும். பொன்னாடை போர்த்தியும் கௌரவித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு மட்டக்களப்பு மண்முனை - வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை 2002ஆம் ஆண்டு இவருக்கு **"தேனகக் கலைச் சுடர்"** விருது வழங்கிக் கௌரவித்தது.



இயற்றிய பாடல்கள்:-

**01. " மாநகராம் மட்டு மாநகராம்..."**

**02. " நிலவு மகள் பாடினாள் ..."**

**03. "தீந்தமிழர் வாழ்கின்ற தேன்நாடு.."**

**04. "நீலக்கடல் ஓரத்திலே ..."**

**05."சோலையிலே பொன் வண்டொன்று"**

**06. "தம்பிகளா அன்பு தங்கைகளா..."**

**07."உருண்டு செல்லும் உலகினிலே.."**

போன்ற பாடல்களை இயற்றியதோடு மட்டுமல்லாது. அவற்றை பல்வேறு இசை நிகழ்வுகளிலும் பாடி மக்களின் ஏகோபித்த கரகோசத்தைப் பெற்றுள்ளார்.

அத்தோடு கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத் துறைப் பீடாதிபதி பேராசிரியர் சி.மௌனகுரு தயாரித்த **"லயம்"** நிகழ்ச்சியில் இடம் பெற்ற பாடல்களை நாட்டின் நாலாபுறமும் உள்ள நகர்களில் பாடி மட்டு நகருக்குப் புகழ் சேர்த்துள்ளார்.

**"செல்வாக்குப் பெற்றவர்கள் பொப்பிசை மன்னர்களாகவும், பொப்பிசைச் சக்கரவர்த்திகளாகவும் திகழ, என்னைப் போன்ற வறுமை நிலையில் உள்ள கலைஞர்கள் அமிர்தகழியில் ஒதுங்கியிருக்கிறோம்"** - என கண்ணீர் கலந்த நிலையில் கூறியது. என்னை ஒரு கணம் மெய்சிலிர்க்க வைத்தது.

இவற்றையெல்லாம் கடந்து 60வயதை அண்மிக்கும் தறுவாயில் இவரை **"தென்றல்"** மனதார வாழ்த்துகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் தாழை செல்வநாயகம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை - பேத்தாழையில் பிறந்து ஆக்க இலக்கியம், நாடகம், கூத்து ஆகியவற்றிற்காக பல விருதுகளைப் பெற்றுள்ள தாழை செல்வநாயகத்தை **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது.

## கலைத்துறை அனுபவங்கள்



இவர் பாடசாலையில் படிக்கின்ற காலத்திலேயே நாடகம் நடிக்கத் தொடங்கி விட்டார். 15 வயதில் கம்பன் கலாமன்றம் என்ற பெயரில் ஒரு கலை மன்றத்தினை உருவாக்கி, அதன் கன்னிப் படைப்பான **"மூடிய திரை"** எனும் நாடகத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பல நாடகங்களிலும் தனது ஆற்றலை வெளிக் கொணர்ந்துள்ளார்.

கூத்தினைப் பொறுத்த வரையில் சிறு வயது முதலே கட்டியக்காரனாக ஆடியுள்ளார். தனது கிராமத்தில் **"புலவர்மணி கலாமன்றம்"** என்ற பெயரில் ஒரு மன்றத்தினை உருவாக்கி, அதன் மூலம் பாரிய கலைகளான கூத்து, மகுடி விளையாட்டு ஆகியவற்றினை அழிவடையாது பாதுகாத்து வருகிறார்.

அத்தோடு பிரபலமான அண்ணாவிமார்களைக் கொண்டு **"பப்ரவாகன் கூத்து", வள்ளியம்மன் நாடகம்", "14 ஆம்போர்"** ஆகிய வட மோடிக் கூத்துக்களை பாடசாலை மாணவர்களையும், ஆடற்கலைஞர்களையும் பயிற்றுவித்து அரங் கேற்றியுள்ளார்.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் கூத்து தொடர்பாக பல்வேறு உரைகளை நிகழ்த்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுதி வெளியிட்ட நூல்கள்**

1. "வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்"
2. "வள்ளியம்மன் நாடகம்" (வடமோடி)
3. ஏதிலிகள் (சிறுகதை)
4. ஈழம் வருகிறான் பாரதி (நாடகநூல்) போன்றன

**பெற்ற கௌரவங்கள், விருதுகள்**



1. பாடசாலை காலத்திலேயே பேச்சு, விவாதம், விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில் பெற்றுள்ளார்.

2. தாரகை எனும் சஞ்சிகை அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் **"எனது சுயமரியாதை புதைக்கப்படுகிறது"** எனும் சிறுகதைக்கு முதல் பரிசு பெற்றமை.
3. இதுவரையும் கோறளைப்பற்று கலாசாரப் பேரவை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கல்குடா கல்வி வலயம் ஆகியவற்றின் மூலம் கலைஞர் கௌரவப்பட்டங்கள் பெற்றமை.

4. 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆளுனர் விருதும், 2008ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் அதியுயர் விருதான **"கலாபூஷணம்"** விருதும் பெற்றுள்ளார்.

5. 2014 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலிருந்து வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் **"தென்றல் சஞ்சிகை"**- உயர் விருதான **"வீசுதென்றல்"**- விருதை இருபத்தைந்தாவது மலர் வெளியீட்டின் போது, வழங்கிக் கௌரவித்திருந்தது.

இவ்வாறாக தனது ஆக்கங்களை, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் தாழை செல்வநாயகத்தின் எழுத்தாக்கல் பணிகள் தொடரவேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்



கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் பிறந்து கவிதை எழுதுவதில் காட்டிய ஆர்வம் காரணமாக பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிக்காட்டி வரும் திருமதி.ஜெகதீஸ்வரி நாதனை **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது.

இவர் **"தம்பிலுவில் ஜெகா"** எனும் புனை பெயரில் கவிதைகளை எழுதி வருகிறார். தனது பன்னிரெண்டாவது வயதில் (1972) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் **"கோயில்மணி"** எனும் தலைப்பில் இவரது முதற்கவிதை ஒலிபரப்பானது.

இவற்றோடு நின்று விடாது இவரது கவிதைகள் இலங்கை வானொலியில் இளைஞர் மன்றம், வாலிப வட்டம், ஒலிமஞ்சரி, பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகின.

**பாடசாலைக் காலம்**

தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் மாணவர் மன்றங்களில் பல கவிதைகளை வாசித்து அதிபர், ஆசிரியர்களது பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். இவரது கவிதைத்துறை வளர்ச்சிக்கு இதே பாடசாலையில் கல்வி புகட்டிய சா.சக்திதாசன் (அக்கரைச்சக்தி) எனும் ஆசானே வழிகாட்டினார். பாடசாலை மட்ட கவிதைப் போட்டிகளில் இவரது கவிதைகள் பரிசில்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1980இல் தினகரன் வாரமஞ்சரியில் **"அன்னை"** எனும் முதல் கவிதை பிரசுரமானது. 1985இல் தம்பிலுவில் பொது நூலகத்தில் நூலக உதவியாளராகக் கடமையாற்றிய தம்பிலுவில் ஜெகாவின் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் பிரசுரமாகின. வாசிப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர் 1982ஆம் ஆண்டில் சாய்ந்தமருதில் இருந்து வெளியாகிய **"கோகுலம்"** எனும் சஞ்சிகையின் துணை ஆசிரியராகக் கடமையாற்றினார்.

எதிர்கால தலைவர்களான மாணவச் செல்வங்களுக்கு அறிவூட்ட வேண்டும் என்ற நோக்கோடு 1990ஆம் ஆண்டு கலைப்பட்டதாரியாக நியமனம் பெற்ற இவர் அக்காலப்பகுதியில் பாடசாலையில் இருந்து வெளிவந்த முத்தாரம், கலசம், செந்தாமரை, கரும்பு போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், உதவி ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார்.

## பெற்ற கௌரவங்கள்

முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.திவ்வியநாதன், திருகோணமலைக் கவிராயர், பாவலர் பஸீல்காரியப்பர், இரா.நாகலிங்கம் (அன்புமணி), அக்கரைப்பாக்கியன், முத்துமீரான், அன்புடீன், பாலமுனைபாறூக், அக்கரை மாணிக்கம் ஆகியோரின் தலைமையில் பல கவியரங்குகளில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிக்கொணர்ந்துள்ளார்.

1993இல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் **"கவிக்கோகிலம்"** எனும் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

1996 இல் நடைபெற்ற திருக்கோவில் பிரதேச சாகித்திய விழாவின் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தொல்லியல் ஆய்வாளருமான க.தங்கேஸ்வரியால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

## கவிதைகள் வெளியான ஊடகங்கள்

2008 பங்குனி மாதம் வெளியான செங்கதிர் சஞ்சிகையிலும், 2010இல் வெளியான கவிஞன் ஆனி மாத இதழிலும் இம்மாதப் பிரபலமாக இவரது கவிப்பயணம் பிரசுரமானது

பெண் எழுத்தாளர் எனும் வகையில் வானொலியிலும் இவரது பேட்டிகள் ஒலிபரப்பாகின. இந்த வகையில் வெளிச்சம் எவ்.எம்.இல்- முதல் மரியாதை, பிறை எவ்.எம். இல் சந்திப்பு, ஊவா சமூக வானொலியில் பூவையர் பூங்கா போன்றவற்றில் இவரது பேட்டிகள் களங்கண்டுள்ளன.

இவற்றோடு 2011.02.20 அன்று வெளியான தினகரன் வாரமஞ்சரி செந்தூ ரத்திலும், 2011.07.19 ஆந் திகதிய தினக்குரலிலும் இவரது பேட்டிகள் பிரசுரமாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1998 இல் இவரது **"இன்னும் விடியவில்லை"** (மூவர் தொகுதி) எனும் முதலாவது கவிதைத் தொகுப்பு அம்பாறை மாவட்ட தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது. அத்தோடு கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியை திருமதி. சித்திரலேகா மௌனகுருவால் தொகுக்கப்பட்ட மட்டக்களப்பு சூரியா பெண்கள் அமைப்பு வெளியீடான கண்ணாடி முகங்கள் (2009), கவிதைகள் பேசட்டும்! (2010) ஆகிய கவிதைத் தொகுதிகளில் ஜெகாவின் கவிதைகள் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் வெளிவரும் தென்றல் ஞானம், செங்கதிர், ஜீவநதி, கதிரவன், கவிஞன், நீங்களும் எழுதலாம், பெண் போன்ற சஞ்சிகைகளில் ஜெகாவின் கவிதைகள் இன்றும் வெளிவந்து கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

இந்நிலையில் கலை, இலக்கியப் பரப்பில் ஓசை நயம்மிக்க மரபுக்கவிதையில் தன்னைப் பிணைத்துக் கொண்ட ஜெகாவின் புதுக்கவிதைத் தொகுதி வெளிவர வேண்டுமெனத் **"தென்றல்"** சஞ்சிகை எதிர்பார்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தியூர் பாலவயிரவநாதன்

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலகிருஷ்ணன் வயிரவநாதன் எனும் இயற் பெயரைக் கொண்ட இவர் தன் பெயருக்கு முன்னால் தான் பிறந்த மண்ணான பருத்தித் துறையை இணைத்து பருத்தியூர் பாலவயிரவநாதன் எனும் பெயரால் இலங்கையின் தேசிய நாளேடுகளில் எழுதி வருபவர்.



இவரைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பேருவகை அடைகிறது.

**பாடசாலைக்காலம்**

தனக்கு கல்வியறிவூட்டிய ஆசான்கள் மூலம் தமிழ், சமய அறிவு வளர்ச்சியடைந்ததாக **"தென்றல்"**க்குத் தெரிவித்தார். பாடசாலைக் காலத்தில் **"அரங்கொலி"**, **"விஞ்ஞானி"** எனும் கையெழுத்துச் சஞ்சிகையை ஆரம்பித்து சித்திரங்களையும் வரைந்து வந்தார்.

**"பிரபஞ்ச வாழ்க்கைத் தத்துவம்"** எனும் தத்துவக் கவிதையினை பதினைந்து வயதில் தான் எழுதியதாகவும்- அதனைப் பலர் நம்பாதது தனக்கு வருத்தத்தைத் தந்ததாகவும் கூறினார்.

**பெற்ற விருதுகள்/பரிசில்கள்**

1.கலாசார அமைச்சினால் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகத் தமிழ்ப் பாடல் பிரிவில் சிறப்புப் பரிசில் பெற்றமை.

2. 2005, 2006ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து சிறுவர் இலக்கியத்திற்காக முதல் பரிசும், விருதும் கிடைத்தமை.

3. 2006ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட சிறுகதைப் போட்டியில் விஷேட சிறப்புப் பரிசிலும், பாடலுக்கான சிறப்புப் பரிசில் உட்பட ஒரே தடவையில் மூன்று பரிசில்கள் பெற்றுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கை இலக்கியப் பேரவையினால் வாழ்வியல் வசந்தங்கள் பாகம்-01 நூலுக்காக முதற்பரிசு கிடைத்தமை.

5. 2009ஆம் ஆண்டு பெற்ற கலாபூஷணம் விருது.

6. 2014 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலிருந்து வெளிவந்து. சாதனை படைத்துக் கொண்டிருக்கும் **"தென்றல் சஞ்சிகை"**- உயர் விருதான **"வீசுதென்றல் விருதை"**- இருபத்தைந்தாவது மலர் வெளியீட்டின் போது வழங்கிக் கௌரவித்திருந்தது.

## தொழில்

ஆரம்பத்தில் ஆசிரியராகவும் பின்னர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பிரதம எழுதுவினைஞராகவும், நிர்வாக உத்தியோகஸ்தராக பதவிநிலை அலுவலராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர் 45 வருடங்களுக்கு மேலாக எழுத்துத் துறையில் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்.

## ஆக்கங்கள் வெளியான ஊடகங்கள்

1. **"வாழ்வியல் தேடல்கள்"** எனும் இவரது சிந்தனைத் தொடர்க் கட்டுரைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஞாயிறு தினக்குரல் மஞ்சரியில் வெளிவந்து கொண்டிருந்தன. தற்போது உளவியல் தொடர்பாக பெண்கள் பகுதியில் எழுதி வருகிறார்.

2. அத்தோடு **"வாழ்வியல் அரங்கம்"** தொடர் வீரகேசரியிலும், வாழ்வியல் சிந்தனைக் கட்டுரைகள் தொடர் தினகரன் வாரமஞ்சரியிலும், **"வாழ்வியலோடு நாம்"** எனும் கட்டுரைத் தொடர் தினசரியாகச் சுடர்ஒளியில் ஏழு மாதங்கள் வெளிவந்தன.

## எழுதி வெளியிட்ட நூல்கள்

வாழ்வியல் வசந்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| பாகம்-01 | பாகம்-06 | பாகம்-11 | பாகம்-16 |
| பாகம்-02 | பாகம்-07 | பாகம்-12 | பாகம்-17 |
| பாகம்-03 | பாகம்-08 | பாகம்-13 | பாகம்-18 |
| பாகம்-04 | பாகம்-09 | பாகம்-14 | |
| பாகம்-05 | பாகம்-10 | பாகம்-15 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாறாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதிவரும் பருத்தியூர் பாலவயிரவநாதன் **"தென்றல்"** போன்ற வளர்ந்து வரும் சஞ்சிகைகளை வளர்த்து வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அந்தவகையில் **"தென்றல் சஞ்சிகை"**- வெளியிடும் ஒவ்வொரு இதழ்களையும் தனது அதீத எழுத்தாற்றலால், **"தினக்குரல்"**- வாரவெளியீட்டில், விமர்சனம் செய்து, **"தென்றல் சஞ்சிகையை"**- ஊரறிய, நாடறிய, உலகறியச் செய்த பெருமை **"வீசுதென்றல்"**- பருத்தியூர் பாலவயிரவநாதனையே சாரும்.

இவரது கலை, இலக்கியப் பணி தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மீண்டும் வேண்டி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிலூர் செல்வராஜன்



ஒரு ஊடகவியலாளனாக, ஒலிபரப்பாளனாக, எழுத்தாளனாக, கவிஞனாக, பாடலாசிரியனாக, சஞ்சிகை ஆசிரியனாக- நடிகனாக இசையமைப் பாளனாக, பாடகனாக எனப் பல பரிமாணங்களில் தன்னைப் பதிவு செய்து கொண்டு, உலகளாவிய ரீதியில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட எமது மண்ணின் மைந்தன் கோவிலூர் செல்வராஜனைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது. இவர் திருக்கோவிலைப் பிறப்பிடமாகவும்- நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்டு கலைப்பணியாற்றி வருகிறார்.

**பாடசாலைக் காலம்**

தனது ஆரம்பக் கல்வியை திருக்கோவில் மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும் பின்பு க.பொ.த (சா.தரம்) வரை தம்பிலுவில் மகா வித்தியாலயத்திலும் கற்றார். அத்தோடு உயர் கல்வியை மட்டக்களப்பிலும் படித்துச் சித்தியடைந்தார்.

**கலைத்துறை ஈடுபாடு**

எழுபதாம் ஆண்டு கொழும்பு மெய்கண்டான் நிறுவனத்தின் **"நட்கதிரமாமா", "கலாவல்லி"** ஆகிய இரண்டு சஞ்சிகைகளிலும் உதவி ஆசிரியராகத் தனது கலைப்பயணத்தைத் தொடங்கினார். அப்பொழுது இலங்கையின் பிரதமராக இருந்த திருமதி சிறிமாவோ பண்டாறுநாயக்கா தமிழ்நாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவற்றிற்கும் தடை விதித்திருந் தார். அதனால் ஈழத்துச் சஞ்சிகைகளுக்கு எழுச்சியும் வளர்ச்சியும் கிடைத்தது.

இதன்காரணமாக இவர் ஆசிரியராக இருந்த சஞ்சிகைகள் அமோக வரவேற்புடன் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகின. இக்காலப் பகுதியில் தனது கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பதிவு செய்து கொண்டு தமிழ் பொருளாதாரம், அரசியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் படித்துத் தேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசைத்துறை ஈடுபாடு**

எழுபதுகளில் ஈழத்துப் **"பொப் பிசை"** வளர்ச்சி பெற்ற காலமாகும். இவரது மைத்துனரான இரா.தெய்வநாயகத்தின் உந்துதலாலும், வழிநடத்தலாலும் மட்டுநகர் **"ஜெயாலயா"** இசைக்குழுவில் பாடகராகவும், தொகுப்பாளரா கவும் தேர்ச்சி பெற்றார். அமரர் எருவில் மூர்த்தியின் பாடல்களை தெய்வராஜனும், இவரும் சேர்ந்துபாடி பின்பு இலங்கை வானொலிவரைக்கும் எடுத்துச் சென்றார்கள்.

அத்தோடு கொழும்பு **"சிவா என்டேடைமென்ட்"** தயாரித்து வழங்கிய பொப்பிசை நிகழ்ச்சிகளில் மறைந்த பிரபல அறிவிப்பாளர் கே.எஸ். ராஜாவுடன் சேர்ந்து தன்னை அறிவிப்பாளராகவும் உருவாக்கிக் கொண்டார்.



இவற்றோடு இலங்கையில் தயாரித்து வெளிவந்த **"நான் உங்கள் "தோழன்" "பாதை" மாறிய பருவங்கள்"** ஆகிய திரைப்படங்களிலும் இவர் நடித்தும், பங்களிப்பும் செய்திருந்தார் மறைந்த திருக்கோவில் கண்ணன் முதலாளியின் அனுசரணையுடன் தம்பிலுவில் மகாவித்தியாலய மைதானத்தில் இவர் நடத்திய **"சுவீட்நைட்"** என்ற கதம்ப நிகழ்ச்சி எமது பகுதிமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மற்றும் தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியிலும் இவரது பாடல்களும், படைப்புக்களும் வெளிவந்து இவரை நாடறிந்த கலைஞனாக உருவாக்க உதவின.

இவரின் **"தேசத்தின் தென்றல்"** என்ற தாயக உணர்வுப் பாடல்களும் கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இயங்கும் தமிழ் வானொலிகளில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. 1997இல் இவர் படைப்பாக வெளியான **"விடியாத இரவுகள்"** என்ற சிறுகதைத் தொகுப்புக்கு தமிழ்நாடு தழுவிய போட்டியில் **"லில்லி தேவ சிகாமணி"** இலக்கியப் பரிசு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேயில் **"தமிழ்நாதம்"** வானொலியில் பணிபுரிந்தபோது- இவரின் **"புதுக்கோலங்கள்"** மெல்லிசைப் பாடல்கள் தொகுப்பும், **"மண்வாசம்"** கவிதைத் தொகுப்பும் வெளியாகின.

2012 ஆகஸ்ட் மாதம் இவரும், இரா.தேவராஜனும் பாடிய **"ஆடிஅமாவாசை"** பாடல் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்வாறாக - நாட்டிலும் - நாடுகடந்தும் இவர் ஆற்றிவரும் பங்களிப்பைத் **"தென்றல்"** மீண்டும் - மீண்டும் மனதார வாழ்த்துகிறது!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதிப்பிள்ளை சபாரெத்தினம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதியைச் சேர்ந்த ஆக்க இலக்கியத் துறையில் அளப்பரிய பங்காற்றி வரும் கணபதிப்பிள்ளை சபாரெத்தினத் தைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

**குடும்பப் பின்னணி**

நாகப்பர் கணபதிப்பிள்ளை என்கின்ற தலைமை ஆசிரியருக்கும் - தங்கமணியம்பாள் என்கின்ற இல்லத்தரசிக்கும் இரண்டாவது மகனாக 1946 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6 ஆம் திகதி ஆரையம்பதியில் சபாரெத்தினம் பிறந்தார்.

**பாடசாலைக் காலம்**

தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு ஆரையம்பதி இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும், தொடர்ந்து தனது தந்தையார் கற்பித்த மட்/காத்தான்குடி முஸ்லீம் ஆண்கள் பாடசாலையிலும் கற்றார். அத்தோடு ஆங்கில மொழி மூலமான இடைநிலைக் கல்வியை மட்/கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றார்.

**தொழில்**

ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்றுத் தேறிய இவர் மட்டக்களப்பு பிராந்திய கல்வித் திணைக்களத்தில் மத்திய எழுதுவினைஞராக நியமனம் பெற்றார். பின்னர் வெளிவிவகார அமைச்சின் கீழ் வரும் ரஷ்ய நாட்டின் மொஸ்கோ இலங்கைத் தூதரகத்தில் ஐந்து ஆண்டுகள் இடைநிலை முகாமைத்துவப் பணிகளை மேற்கொண்டார்.

**கலைத்துறை ஈடுபாடு**

**"மொஸ்கோ அனுபவங்கள்"** 'தேடல்களை பகுதி -01 இலிருந்து 20 கதைப் படலங்களாகவும், பகுதி - 02 இலிருந்து பன்னிரு கதைப் படலங்களாகவும், தொகுத்தளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமது பிரதேசத்தில் நடைபெறும் கலை, கலாச்சார நிகழ்வுகளில், கலந்து கொள்வதோடு, அவ்வப்போது வெளியிடப்படும் புத்தகங்களை வாங்கி அவர்களை ஊக்கப்படுத்தும் உயரிய பண்புகளையும் கொண்டிருந்தார். மேலும் பல்வேறு கலைஞர்களுடன் தொடர்பு கொண்டு மட்டக்களப்பில் எவ்வாறு கலை, இலக்கியச் செயற்பாடுகளை வளர்த்துச் செல்லலாம் எனவும் உரையாடல்களில் ஆடுபட்டு வந்தார்.

## பெற்ற விருதுகள் / கௌரவங்கள்

1. 2004 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வடக்கு- கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில், 2003 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களுள் ஒன்றாக, **"மொஸ்கோ அநுபவங்கள்"** நூல் தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றார்.

2. இதற்காக மட்டக்களப்பு அன்பு வெளியீட்டகத்தின் ஸ்தாபகர் இரா. நாகலிங்கம் (அன்புமணி) **"ஆரையம்பதி அறிஞர்"** என்ற விருது வழங்கிக் கௌரவித்தார்.

3. கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய 2012 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் **"முதலமைச்சர்"** விருது பெற்றார்.

## ஆக்கங்கள் வெளியான ஊடகங்கள்

**"ஆரையம்பதியின் கலைப் பாரம்பரியம்", "நம்பியின் பெயர் காத்த நால் வேதன்", "தமிழ்மொழி வளர்ச்சி", "தமிழில் அர்ச்சனை பற்றிய சர்ச்சை", "காலத்துக்கேற்றகருத்துக் குவியல்கள்", "ஆசிரியரே நாட்டின் உயிர்", "மொஸ்கோவில் தத்தளிக்கும் இலங்கையர்கள்", "மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்த் தாத்தா", "தமிழ் இலக்கியக் கலாசார விழாவும் எனது யாழ்ப்பாண விஜயமும்", "இந்து மதத்தின் இன்றைய தேவைகள்", "ஒழுக்கமும் மனிதவிழுமியங்களும்"** முதலான கட்டுரைகள் தேசிய பத்திரிகைகளான வீரகேசரி , தினகரன், சிந்தாமணி ஆகியவற்றில் பிரசுரமாகியுள்ளன.

இவ்விதமாகப் பல்துறைக் கலைஞனாக வலம் வரும் க.சபாரெத்தினம் தொடர்ந்தும் தனது சேவையை மட்டக்களப்பு மக்களுக்கு ஆற்ற வேண்டுமெனத் **"தென்றல்"** மீண்டும், மீண்டும் மனதார வாழ்த்துகிறது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவராஜா. மோகனப்பிரியன்



மட்டக்களப்பைச் சேர்ந்த தவராஜா மோகனப்பிரியன் தனது உயர் கல்வியை உரிய வகையில் கற்பதற்காக கடல் கடந்து சென்று இன்று நடனத் துறையில் இமாலய சாதனை படைத்து வருகிறார்.

இவ்வாறான புகழ் பூத்த கலைஞரைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

## குடும்பப் பின்னணி

மட்டக்களப்பைச் சேர்ந்த தவராஜா என்கின்ற தொழிலதிபருக்கும் விஜயசுந்தரி என்கின்ற இல்லத்தரசிக்கும் மூத்த மகனாக மட்டக்களப்பில் அவதரித்தார்.

## பாடசாலைக் காலம்

தனது கல்வியினை மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் கற்றதாகவும் தனது ஈடுபாடு கூடுதலாக நடனத் துறையில் இருந்ததன் காரணமாக நடனக் கல்வியின் ஆரம்பத்தினை பரதக் கலாலயாவில் பரத சூடாமணி ஸ்ரீமதி சுபித்ரா கிருபாகரனிடம் கற்றதாகவும் அவர் **"தென்றல்"**க்கு பெரும் ஆதங்கத்தோடு தெரிவித்தார்.

## உயர் கல்வித் தகைமைகள்

பரதத்தில் தனது இளநுண்கலை மற்றும் முது நுண்கலைப் பட்டப் படிப்பினை இந்தியாவில் திருச்சிப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் சுமார் 7 வருடங்கள் கற்று, முதல் தரத்துடன் தங்கப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

பரத நாட்டியம் தவிர, குச்சுப்புடிக்கான பட்டயப் படிப்பினை மறைந்த கலாபூஷணம் ஸ்ரீ கிருஷ்ணாவிடமும், மோகினி ஆட்டத்திற்கான பட்டப்படிப்பினை ஸ்ரீமதி குமாரி மேனனிடமும் கற்று அரங்கேற்றத்தையும் நிகழ்த்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**பெற்ற பட்டங்கள்**

01. பாரதி யுவகேந்திரா அமைப்பினால் பரத நாட்டியத் துறையில் ஆற்றி வரும் சேவைக்காக வழங்கப்பட்ட **"சுவாமி விவேகானந்தர்"** விருது
02. திருச்சி மாணவர் இயக்கம் வழங்கிய **"வளரும் சாதனையாளர்"** விருது.
03. ஜெகரட்சகன் அமைப்பு வழங்கிய **"நடனக் கலையரசன்"** விருது.
04. திருச்சி நிருத்திய சிகர நாட்யாலயா குச்சுப்புடித் திறமைக்காக வழங்கிய **"நாட்டியக் கலையரசன்"** விருது.

**அரங்கேற்றமும் - தொழிலும்**

தனது நடனத் திறமையினை இலங்கை, இந்தியா, ஜேர்மனி, நோர்வே, நெதர்லாந்து, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் நிகழ்வுகளை நடாத்தியதன் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். அது மட்டுமன்றி இந்தியாவில் 50 மாணவர்களுக்கு நடனத்தைப் பயிற்றுவித்து அரங்கேற்றத்தையும் நடாத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெருமை அன்னாரையே சாரும். இவர் தற்பொழுது சிங்கப்பூர் தேசியகலைப் பேரவையின் அனுசரணையுடன் இயங்கி வரும் அப்சராஸ் கலை நிறுவனத்தின் நடனப்பயிற்றுவிப்பாளராகவும், வடிவமைப்பாளராகவும் பணி புரிந்து கொண்டிருக்கிறார். அத்தோடு இலங்கையில் அருஸ்ரீ கலையகத்தில் நடனக் கலைஞராகவும், வடிவமைப்பாளராகவும் சீரிய சேவை புரிகிறார்.

இவற்றோடு தனது கலை ஆற்றலை நிறுத்தி விடாது, இந்தியாவில் கல்வி கற்கும் காலங்களில் பல நடனங்களையும், ராமாயணம், நந்தனார் சரித்திரம் போன்ற நாட்டிய நாடகங்களையும் வடிவமைத்து நிகழ்ச்சியாக வழங்கி யிருக்கிறார். அத்தோடு சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட "shakthi classical dance stars" தொகுப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

இவ்வாறாக எமது மண்ணிலிருந்து இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று நடனத் துறையில் இமாலயச் சாதனைகள் படைத்து வரும் மோகனப் பிரியனின் சாதனைகள் இன்னும்- இன்னும் தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடப்பூர் வீரசொக்கன்

புத்தளம் மாவட்டத்துக்குத் தனியான சிறப்புண்டு. வட- கிழக்கைத் தவிர்ந்த தமிழர்களின் பெருமைகளை, இருப்பை, பேருண்மைகளை எடுத்துச் சொல்லும் மாவட்டம் புத்தளம்.



இம்மாவட்டத்தில் எண்ணிறைந்த தமிழ்க் கிராமங்கள் இருக்கின்றன. இக்கிராமங்களெல்லாம் ஏதோ புறகாரணங்களால் பெரும்பான்மை சமூகத்தில் இரண்டறக் கலந்து உள்வாங்கப்பட்ட இக்காலச் சூழலில் இதற்கெல்லாம் ஈடுகொடுத்துத் தனித்துவத்தை விட்டுக் கொடுக்காமல் தமது சமயத்தை, மொழியை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கும் இடமே உடப்பு எனக் கூறினால் அது மிகையில்லை.

இவ்வகையில் கலை, இலக்கிய, ஊடகத்துறைகளில் பணியாற்றி வரும் **"உடப்பூர் வீரசொக்கனைத்" "தென்றலின்தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

## குடும்பப் பின்புலம்

இக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து, இலக்கியத் துறையிலும், ஆக்கத் துறையிலும்- அமைதியுடனும், அடக்கத்துடனும், நேயப் பண்புடனும் அளப்பரிய பங்களிப்பாற்றிவரும் உடப்பூர் வீரசொக்கனைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** சிறப்படைகிறது.

வீரபத்திரன் என்ற தகப்பனுக்கும், முத்துராக்காய் என்ற இல்லத்தரசிக்கும் இரண்டாவது மகனாக வீரசொக்கன் அவதரித்தார்.

## பாடசாலை நாட்களும், தொழிலும்

இளம் வயதில் தகப்பனை இழந்த இவர் தனது ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியையும் உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றார். பின்னர் ஒன்றிணைக்கப்பட்ட அரச எழுதுவினைஞராக 1980 இல் இணைந்து கொண்ட இவர் புத்தளம் பிரதேச செயலகம், முந்தல் பிரதேச செயலகம், கடையா மோட்டை தற்காலிக பிரதேச செயலகம் ஆகியவற்றில் பணிபுரிந்து, இறுதியாக மாவட்ட செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

**கலைத்துறைப் பயணம்**

இவர் கலைத்துறையிலும், நாடகத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இதன்காரணமாக உடப்பு நாடக மேடையில் பல்வேறு நாடகங்களில் தோன்றி நடித்துள்ளதுடன்- பலமேடை நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். அத்தோடு மட்டும் நின்றுவிடாது நாடக மேடைகளில் அறிவிப்பாள ராகவும், **"ஹரேகிருஷ்ணா", "ஸ்ரீ கிருஷ்ண"** ஆகிய இசைக்குழுக்களின், அறிவிப்பாளராகவும் இருந்து வருகிறார்.

**வெளியான ஆக்கப் படைப்புக்கள்**

1. **"அலை ஓசை" (ரோணியோப்பதிப்பு)**
2. **"உடப்பு திரௌபதையம்மன்" - (பார்த்த சாரதி) ஆலய வரலாறு -1989**
3. **"கங்கை நீர் வற்றவில்லை" -(கவிதைத் தொகுதி) -1990**
4. **"அலைகடல் ஓரத்தில் தமிழ்மணம்" -1997**
5. **"வீராவின் கதம்பமாலை" - 2000**
6. **"கீர்த்திமிகு உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் -2007**
7. **"முண்டத்துண்டு" - சிறுகதைத்தொகுதி -2008**
8. **"உப்புக்காத்து" - (கவிதைத்தொகுதி) -2009**
9. **"நம்ம ஊரவங்க" - 2010**
10. **"முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் வரலாறு அறிமுகம்" - 2010**
11. **"கதை சொல்லும் உடப்பு" - 2013**

**விருதுகள் மற்றும் கௌரவங்கள்**

1. உடப்பு திரௌபதையம்மன் (பார்த்தசாரதி) ஆலய வரலாற்று நூலுக்கான **"சமய எழுத்தாளர் விருதினையும், பொற்கிளியையும்"** -1995 இல் இடம்பெற்ற அறநெறி விழாவில் இந்துசமய இராஜாங்க அமைச்சர் பி.பி .தேவராஜ் வழங்கி வைத்தார்.

2. சர்வதேச ஐயப்பதாஸ் சம்மேளனம் கலை, இலக்கிய, ஊடகத் துறைக்கு வழங்கி வரும் பங்களிப்புக்காக வழங்கிய **"கலை இளவல்"** என்ற பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **"வினிவித் என்ற அரச சார்பற்ற நிறுவனம்"** வழங்கிய **"கீர்த்தி மாத்திய சேவா"** என்ற பட்டம்.

4. **"அகில இலங்கை சமாதான சங்கம்"** வழங்கிய **"தசகீர்த்தி"** என்ற பட்டம்.

5. **"வடமேல் கலாசார ஒன்றியம்"** வழங்கிய **"தமிழ்மணி"** என்ற பட்டம்.

6. **"தடாகம் கலை, இலக்கியச் சஞ்சிகை"** 2006 ஆம் ஆண்டு குருணாகல், நகர சபை மண்டபத்தில் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தலைமையில் வழங்கிய **"கலைத்தீபம்"** என்ற பட்டம்.

7. கலாசார அமைச்சின் கீழ் இயங்கும் **"நாடகசபா" வழங்கிய "அகில இலங்கை சமாதான நீதவான்"** என்ற பட்டம்.

8. முந்தல் பிரதேச செயலாளர் பணிமனை நடத்திய சாகித்திய விழாவில் **"பொன்னாடை போர்த்தி , விருது"** வழங்கப்பட்டது.

09. புத்தளம் இந்துமகா சபையில் நீண்டகாலமாகச் செயலாளராகப் பணிபுரிந்த மைக்காக **"பொன்னாடை போர்த்திக்கௌரவிப்பு"**

10. இலங்கைச் சினிமாப் படமான **"மண்"** படத்தில் நடித்தமை.

11. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற புத்தளம் மாவட்டச் சாகித்தியப் பெரு விழாவில் (உடப்பில்) **"விருது"** வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

12. **"புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அறிவிருட்சம்"** நடத்திய கலைஞர் கௌரவிப்பில் வழங்கப்பட்ட **"2011 க்கான கலைப்பொழிவு விருது"**

13. **"தடாகம் கலை, இலக்கிய வட்டம்"** கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 2012 இல் வழங்கிய **"இலங்கை வானொலி புகழ் இராஜேஸ்வரி சண்முகம் நினைவு விருது"**

14. புத்தளம் ஜும்மா மொஹிதீன் அனுசரணையுடன் புத்தளம் "online" நடத்திய இரண்டாம் ஆண்டு விழாவில் வழங்கப்பட்ட **"2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர் விருது"**.



இவ்வாறாகப் பெரும்பான்மைச் சூழலில் கலை, இலக்கிய. ஆக்கப் படைப்புத் துறையில் அதீத ஆற்றலைத் திறமைகளை வெளிக்கொணர்ந்து வரும் **"கலைஞர் வீரசொக்கனின்"** சாதனைகள் இன்னும் இன்னும் தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிகம ரிம்ஸா முஹம்மத்



வெலிகம ரிம்ஸா முஹம்மத் பற்றிய தகவல்கள் இலங்கையின் அனைத்து தேசியப் பத்திரிகைகள், இலங்கை, இந்திய சஞ்சிகைகள், வலைத்தளங்கள் பலவற்றிலும் தன்வலைப் பூக்களிலும் எழுதி வரும் படைப்பாளி வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்கள் கவிதை, சிறுகதை, விமர்சனம், சிறுவர் இலக்கியம், மெல்லிசைப்பாடல் என தனது ஆளுமையை வெளிப்படுத்தி வருகிறார்.

இவர் தற்போது பூங்காவனம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் **"பூங்காவனம்"** என்ற காலாண்டு சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் விளங்குகின்றார். இவரை **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பேருவகை அடைகிறது.

## வாழ்க்கைக் குறிப்பு

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம்,வெலிகம தேர்தல் தொகுதியைச் சேர்ந்த கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மத் - லரீபா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

வெலிகம அறபா தேசிய பாடசாலை மற்றும் வரக்காப்பொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார். கணக்கீட்டுத் துறையில் **MAAT, MIAB** ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர், தனியார் நிறுவனத்தில் உதவிக் கணக்காளராக கடமையாற்றி வருகிறார்.

## இலக்கிய ஈடுபாடு

இவர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் என்ற சொந்தப் பெயரிலும், வெலிகம கவிக்குயில், வெலிகம நிலாக்குயில் என்ற புனைப் பெயர்களிலும் எழுதி வருவதுண்டு. 2004 இல் தினமுரசு பத்திரிகையில் **'நிர்மூலம்'** என்ற கவிதையை எழுதியதை யடுத்து இதுவரை சுமார் 300க்கும் மேற்பட்ட கவிதைகளையும், 10 க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 60க்கும் மேற்பட்ட நூல் விமர்சனங்களையும், சிறுவர்களுக்கான கதை, பாடல்களையும் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதழியல் துறை**

தற்போது பூங்காவனம் இலக்கிய வட்டம் என்ற இலக்கிய அமைப்பின் தலைவராகவும், பூங்காவனம் காலாண்டு சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் சேவையாற்றி வருகிறார்.
2013 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியை பூரணப்படுத்தியுள்ளார்.

**ஊடகத்துறை**

1997 - 1998 ஆம் ஆண்டுகளில் சூரியன் எப்.எம். சக்தி எப்.எம். போன்ற அலைவரிசைகளில் இவரது ஏராளமான கவிதைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.
சுமார் ஒன்றரை வருட காலங்களாக (2004 - 2005) இலங்கை வானொலி முஸ்லிம் சேவை மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியில் பிரதிகள் தயாரித்தும் நேரடியாக குரல் கொடுத்துமுள்ளார்.

- 2008 டிசம்பர் 09 இல் நேத்ரா அலைவரிசையில் ஹஜ் பெருநாள் கவியரங்கத்தில் பாலகரே துஆக் கேளுங்கள் என்ற தலைப்பில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2009 ஜூன் 29 இல் நேத்ரா அலைவரிசையில் முஸ்லிம் நிகழ்ச்சியில் நாளும் நடப்போம் நல்வழியில் என்ற தலைப்பில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2011 பெப்ரவரி 13 இல் கவிஞர் திரு. சடாகோபன் அவர்களின் தலைமையில் சக்தி எப்.எம் அலைவரிசையில் கவிராத்திரி நிகழ்ச்சியில் **"மெல்லக் கதவுள் மிடுக்காய் ஒளிந்தாள்"** என்ற தலைப்பில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2012 ஆகஸ்ட் 19 ஊவா சமூக வானொலி அலைவரிசையின் விசேட நோன்புப் பெருநாள் முஸ்லிம் நிகழ்ச்சியில் **"உயிர் செய்"** என்ற கவிதை கூறியிருக்கிறார்.
- 2013 ஜுலை 14 இல் நேத்ரா அலைவரிசையில் முஸ்லிம் நிகழ்ச்சியில் **"இறையோன் தந்த மாதம்"** என்ற கவிதை கூறியிருக்கிறார்.
- 2013 ஆகஸ்ட் 09 இல் ஊவா சமூக வானொலி அலைவரிசையின் விசேட நோன்புப் பெருநாள் முஸ்லிம் நிகழ்ச்சியில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2013 ஆகஸ்ட் 09 இல் நேத்ரா அலைவரிசையின் விசேட நோன்புப் பெருநாள் முஸ்லிம் நிகழ்ச்சியில் இடம் பெற்ற இலங்கையின் பிரபல இசையமைப்பாளரான ஜனாப். டோனி ஹஸன் அவர்கள் இசையமைத்து, பிரபல பாடகரான ஜனாப். எம்.எம். கபூர் அவர்கள் பாடிய **"வல்லோனின் ஆணை வரமாய் நினைத்தே தினமும்"** என்ற இஸ்லாமிய மெல்லிசைப் பாடலை எழுதியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளியிடப்பட்ட நூல் வெளியீடுகள்

01. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (கணக்கீடு) 2004 - சுஹறா பப்ளிகேஷன்
02. கணக்கீட்டுச் சுருக்கம் (கணக்கீடு) 2008 - காயத்திரி பப்ளிகேஷன்
03. கணக்கீட்டின் தெளிவு (கணக்கீடு) 2009 - இஸ்லாமிக் புக் ஹவுஸ்
04. தென்றலின் வேகம் (கவிதை) 2010 - முற்போக்கு கலை இலக்கிய மன்றம்
05. ஆடம்பரக் கூடு (சிறுவர் கதை) 2012 - ரூம் டு ரீட்
06. என்ன கொடுப்போம்? (சிறுவர் கதை) 2012 - ரூம் டு ரீட்
07. பாடல் கேட்ட குமார் (சிறுவர் கதை) 2013 - ரூம் டு ரீட்
08. கவிதைகளுடனான கைகுலுக்கல் ஒரு பார்வை (விமர்சனம்) 2013 - கொடகே வெளியீடு

## வெளிவர இருக்கும் நூல்கள்

01. எரிந்த சிறகுகள் (கவிதை)
02. வண்ணாத்திப் பூச்சி (சிறுவர் பாடல்)

## இவரது கவிதைகளின் பாடுபொருள்கள்

காதல், பெண்ணியம், சமூக அவலம், சீதனக்கொடுமை, போர்ச்சூழல், மானிட நேயம் என்பன இவரது பாடுபொருள்களாக காணப்படுகின்றன.

## இவர் பற்றிய குறிப்புக்கள்

- 2004ம் ஜுலை 04 செந்தூரம்
- 2007 பெப்ரவரியில் கலாபூஷணம் புன்னியாமீன் அவர்கள் வெளியிட்ட இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 07ல் 175 ஆவது நபராக இவரைப்பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- 2007 ஜுன் இதழ் ஞானம்
- 2008 பெப்ரவரி 3 - 9 சுடர் ஒளி பத்திரிகையின் '**உணர்வுகள்**' பகுதி
- 2008 ஜுலை இதழ் செங்கதிர்
- 2008 ஜுலை 20 நவமணி பத்திரிகையில் வெளியான **"இலங்கை திசை பரத்தி"**
- 2009 நவம்பர் 08 (அமரர் ஸ்ரீதர் பிச்சையப்பா) மித்திரன் கலாவானம்
- 2010 ஏப்ரல் 18 (க. கோகிலவாணி) மித்திரன் கலாவானம்
- 2011 ஜனவரி 23 தினகரன் கதம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2012 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான இதழ் கவிஞன் சஞ்சிகையின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து, இவர் பற்றியதகவல்களை வெளியிட்டு கௌரவித்திருந்தது.
    - முத்துக்கமலம் இணையத்தளம்
    - விக்கிப்பீடியா வலைத்தளம்
    - காற்றுவெளி இணைய இதழ்

**இவரது படைப்புக்கள் இடம்பெற்றுள்ள பிற நூல்கள்**

- இந்தியாவில் வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்காலுக்குப் பின் என்ற கவிதைத் தொகுப்பில் இவரது கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2011 ஜூன் மாதம் லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் அமைப்பினால் வெளியிடப்பட்ட உன்னை நினைப்பதற்கு என்ற கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

**நேர்காணல்கள்**

- 2009 நவம்பர் 22 மித்திரன் வாரமலர்
- 2010 ஜனவரி 20 நேத்ரா அலைவரிசை உதய தரிசனம் சிறப்பு அதிதி நேர்காணல்
- 2010 ஆகஸ்ட் 01 - 14 எங்கள் தேசம்
- 2011 மார்ச் 13 தினகரன் வாரமஞ்சரி செந்தூரம் இதழின் அட்டைப்படத்தில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து, நேர்காணல் செய்து கௌரவித்திருந்தது
- 2011 மார்ச் 23 டேன் அலைவரிசை இன்றைய பிரமுகர் சிறப்பதிதி நேர்காணல்
- 2013 மார்ச் இதழ் தினமகுடி சஞ்சிகையில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து நேர்காணல் செய்து கௌரவித்திருந்தது.

**விருதுகள், பரிசுகள்**

- 2007 இல் அகில இன நல்லுறவு ஒன்றியம் இவருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி **"சாமஸ்ரீ கலாபதி"** என்ற பட்டத்தை கொடுத்து கௌரவித்துள்ளது.

- 2008 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 இல் அல்ஹஸனாத் சஞ்சிகை நாடளாவிய ரீதியில் நடாத்திய பேனாக்கள் பேசட்டும் என்ற கவிதைப் போட்டியில் பாராட்டுப் பத்திரம் பெற்றுள்ளார்.

2012 இல் கொழுந்து சஞ்சிகையினால் சர்வதேச மகளிர் தின விழாவில் இதழியல் துறையில் ஆற்றிவரும் பணிக்காக இவருக்கு பொன்னாடைபோர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி **"சாதனைக்குரிய மகளிர் விருது"** பட்டத்தை கொடுத்து கௌரவித்துள்ளது.

2013 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.

2013 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் தெஹிவளைப் பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த கவிதைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றுள்ளார்.

தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் 'வியர்வையின் ஓவியம்' உழைக்கும் மக்கள் கலைவிழா 2013 தேசிய ரீதியில் நடத்திய இலக்கியப் போட்டிகளில் பாடல் இயற்றும் போட்டியில் **"வெயில் நிறத்து தோல் கொண்டு"** என பாடலுக்காக மூன்றாம் இடம் பெற்றுள்ளார்.

2013 இன ஒற்றுமைக்கான அகில இலங்கை தேசிய கவிஞர்களின் சம்மேளனம் **"காவிய பிரதீப"** பட்டத்தை கொடுத்து கௌரவித்துள்ளது.

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை வருடாந்தம் நடாத்தும் 2013 அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் **"பணம் பந்தியிலே"** என்ற இவரது சிறுகதைக்காக பரிசுச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

## இவரது ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், சர்வதேச வானொலி

- ❖ வீரகேசரி, தினகரன், தினக்குரல், மித்திரன், மெட்ரோ நியூஸ், சுடர்ஒளி, நவமணி, விடிவெள்ளி, எங்கள் தேசம், இருக்கிறம், வேகம், ஜனனி போன்ற இலங்கையின் முன்னோடிப் பத்திரிகைகள்.

- ❖ ஓசை, மரங்கொத்தி, ஜீவநதி, செங்கதிர், படிகள், அல்லஜ்னா, அலஹஸனாத், அஸ்ஸகீனஹ், தூது, ஞானம், நீங்களும் எழுதலாம், மல்லிகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேனா, மொழி, கவிஞன், தென்றல் மற்றும் இந்திய இதழான இனிய நந்தவனம் போன்ற சஞ்சிகைகள்.

❖ வார்ப்பு, முத்துக்கமலம், கீற்று, தமிழ் ஆதர்ஸ், பதிவுகள், ஊடறு, திண்ணை, தேனீ, இத்தியாதி ஆகிய இணையத்தளங்கள்.

❖ லண்டன் தமிழ் வானொலி.

இவ்வாறாக இலக்கிய உலகில் சாதனைகள் பல புரிந்து வரும் "ரிம்சா முஹம்மத்தின்" சாதனைகள் இன்னும், இன்னும் தொடர வேண்டுமெனத் "தென்றல்" மனதார வாழ்த்துகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. ஜயந்திமாலா குணசீலன்



மட்டக்களப்பு மாவட்டத்தின் குருமண்வெளியில் பிறந்து வளர்ந்து ஒரு காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் புகழ்பரப்பிய திருமதி ஜயந்திமாலா குணசீலனைத் **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

இவர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து சுவிற்சலாந்து நாட்டில் தனது கணவர், பிள்ளைகளோடு வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் அண்மையில் மட்டக்களப்புக்கு வருகை தந்த திருமதி ஜயந்திமாலா குணசீலனைத் **"தென்றலின் தேடல்"** க்காகச் சந்தித்து உரையாடினேன். அவற்றை வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

## குடும்பப் பின்புலம்

அருள் செல்வநாயகம் என்ற ஓய்வுபெற்ற அதிபருக்கும், அருளம்மா என்ற இல்லத்தரசிக்கும் மகளாக ஜயந்திமாலா அவதரித்தார்.

## பாடசாலை நாட்களும், பல்கலைக்கழகமும்

தனது ஆரம்பக் கல்வியை குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்திலும், உயர்கல்வியை பட்டிருப்புத் தேசிய பாடசாலையிலும், அக்கரைப்பற்றிலும் கற்றார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது கல்விமாணிப் பட்டப்படிப்பினை நிறைவு செய்தார். இக்காலப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகக் கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு தந்தையின் கலையார்வம், தாயார் தந்த உற்சாகம் காரணமாகவே இவை சாத்தியமானதாகவும் தெரிவித்தார்.

தனது பட்டப்படிப்பினை நிறைவு செய்ததும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச்சேவைத் தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் பணிபுரிந்தார்.

அத்தோடு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்தி வாசிப்பாளராகவும் தமிழைத் தமிழாக எடுத்தியம்பியதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

1980 காலப்பகுதியில் ரூபவாஹினி தொலைக்காட்சியில் மட்டக்களப்பிலிருந்து பணிபுரிந்தவர் என்ற பெருமையையும் கொண்டிருந்ததாகவும் பெருமையோடு **"தென்றல்"** க்குத் தெரிவித்தார்.

மேலும் சவசங்கீத, ஆயுபோவன் ஆகிய நிகழ்ச்சிகளை தனது வசீகரக் குரலால் திறம்படச் செய்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களை கவர்ந் திருந்ததையும் குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போது நேயர்கள் நேரடியாகக் கலந்து கொண்டு தங்கள் குரலில் உரையாடும் நிகழ்ச்சிகள் இடம்பெறுவதாகத் தெரிவித்தார். எனினும் தமிழ் பேச்சு வழக்கில் இடம்பெறுவதாகவும், தமிழ் தமிழாகக் காப்பாற்றப்பட வேண்டுமென்ற ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

இவற்றோடு 2008ஆம் ஆண்டில் தனது தந்தை எழுதிய **"விபுலானந்தர் இலக்கியம்"** என்ற நூலினை தொகுத்து வெளியிட்டார்.

இது விபுலானந்தர் கவிதைகள், விபுலானந்த அமுதம், விபுலானந்த சொல்வளம், விபுலானந்த இன்பம், இவை அனைத்தையும் ஒன்றிணைத்த வகையில் களங்கண்டது.

இவ்வாறாகப் புலம்பெயர்ந்து சென்றாலும் தமிழைத் தமிழாக நேசிக்கின்ற திருமதி ஜயந்திமாலா குணசீலனின் தமிழ்ப்பணி தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பன் கணபதிப்பிள்ளை



மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை எழில் நிறைந்த, வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும் ஆரையம்பதியில் பிறந்து, தனது 91 ஆவது அகவையில் கால்பதித்திருக்கும் மு.கணபதிப்பிள்ளை (மூனாக்கானா) தனது 60 ஆண்டுகால வைரவிழாத் திருமண நிறைவாண்டையும் அண்மையில் கல்வியியலாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், குடும்பத்தார், உறவினர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டிருக்கக் கொண்டாடினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளால் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். **"கலைஞர்கள் வாழும் போதே வாழ்த்த வேண்டும்"** என்ற உண்மைத் தத்துவம் இங்கு நிஜமானது.

இத்தகைய பெருமைகள் பல பொருந்திய மு.கணபதிப்பிள்ளையைத் (மூனாக் கானா) **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக்கொணர்வதில் **"தென்றல்"** பெருமை கொள்கிறது.

**குடும்பப் பின்புலம்**

முருகப்பன் - தங்கம்மா தம்பதியினருக்கு 1924.01.22 அன்று மகனாகப் பிறந்தார். தனது வாழ்க்கைத் துணையாக சின்னப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தார்.

இவருக்கு சந்திரகுமாரி (கணித ஆசிரியை), சந்திரகுமாரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்), சூரியகுமாரன் (வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி), சூரியகுமாரி (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை) நான்கு பிள்ளைகள் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலைக் காலமும், தொழிலும்**

தனது கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் மேற்கொண்டார். பின்னர் தொழிற்கல்வியை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (1947/1948) பூர்த்தி செய்தார். இதனைத் தொடர்ந்து ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட மூனாக்கானா கண்டி றம்புக்- எல அ.த.க. பாடசாலையில் 1949 இல் நியமனம் பெற்றார். இதனைத் தொடர்ந்து பல பாடசாலைகளிலும் கடமையாற்றி, இறுதியாக மட்டக்களப்பு ஆரையம்பதி கோயில்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் கடமையாற்றி 1981 இல் ஓய்வு பெற்றார்.

**கலை, இலக்கிய ஈடுபாடு**

**அ) கவிதை**

1. புளுகுப்புராணம், காலாகோலம் கவிதைகள் **"தினகரன் வாரமஞ்சரி"** இல் தொடர்ச்சியாக பல வாரங்கள் வெளிவந்தன.
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கவிதைக் கலசம் நிகழ்ச்சியில் **"கடவுளும் நானும்"** என்ற கவிதை அனேக நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டது.
3. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரு தடவைகள் முதலாவது பரிசைப் பெற்றுள்ளார்.
4. **"தீர்த்தக்கரைதனிலே"** என்ற தலைப்பில் மாமாங்கேஸ்வரர் மீது பாடப்பட்ட பாடல் இறுவட்டில் இவர் எழுதிய **"மாமாங்கம் என்று ஒரு ஊர்"** என்ற பாடல் இடம்பெற்றுள்ளது.
5. நகைச்சுவைக் கவிதைகளிலே **"எம்பிக்குக் காவடி தம்பி"** என்ற கவிதை பலரது பாராட்டையும் பெற்றது.
6. கிழக்கு மாகாண சபைக்கான கீதமாக இவரது கீதம் தேர்வுசெய்யப்பட்டது.

**ஆ) கூத்து**

1. அலங்காரரூபன் கூத்து தமிழ்மொழித் தினப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.
2. லெட்சுமி கல்யாணம், பரிசாரிமகன், சூறாவளிக்கூத்து, அண்ணனும் தங்கையும், முதியோரைக் காப்போம் என்னும் கூத்துக்கள் இவரால் எழுதப்பட்டவை.
3. 1949 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் **"மட்டக்களப்பில் நாட்டுக் கூத்து"** பற்றி 15 நிமிடங்கள் பேசியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மட்டக்களப்பு வெபர் மைதானத்தில்1976 இல் இடம்பெற்ற அகில உலக தமிழாராட்சி மாநாட்டை ஒட்டி இலங்கைக் கிளை நடத்திய கலைவிழாவில் ஆடப்பட்ட அலங்காரரூபன் கூத்தில் அலங்காரரூபனாக நடித்துள்ளார். அத்தோடு 1977 இல் இடம்பெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வருடாந்த மாநாட்டில் **"பரிசாரி மகன்"** என்ற கூத்தை எழுதியதோடு, அதில் சாத்திரியாராகவும் நடித்துள்ளார்.

### நாடகம்

**"இருலேகா", "எல்லோரும் ஓரினம்", "கடிதம் வந்தது", "அப்பாவைத் திருத்திய மகன்", "யமலோகத்தில்" , "சம்பந்தி", "இளங்கோ துறவு"** ஆகிய நாடகங்களை எழுதியுள்ளார்.

இதில் பதுளை கனிஷ்ட வித்தியாலய மாணவிகளைக் கொண்டு பழக்கிய **"இளங்கோ துறவு"** என்ற நாடகம் ஊவா மாகாணத் தமிழ்த் தினப்போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றது.

### வில்லுப் பாட்டு

**"குடி", "கேடு", "ஒன்றே இனம்", "கதிராமன் புத்திரன்", "விவேகானந்தர்", "பெற்று விட்டால் போதுமா?"** போன்ற வில்லுப்பாட்டுகளை எழுதிப் பழக்கியுள்ளார்.

### கிராமிய நடனங்கள்

**"சீரழியும் சின்ன வயது", "புதுமைப்பெண்", "கிழவனும் - கிழவியும்", "விவசாயத் தொழிலே வேண்டும்"** போன்ற தலைப்பில் பல கிராமிய நடனங்கள் இவரால் ஆக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

### எழுதி வெளியிட்ட நூல்கள்

1. இலக்கிய நெஞ்சம் - இது பத்திரிகையில் எழுதி வெளியிட்ட இலக்கியக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் (2002)

2. கவிதை நெஞ்சம் - பத்திரிகைகள், வானொலி, இலக்கிய விழாக்கள், விழா மலர்கள், கவிதைப் போட்டிகள் போன்றவற்றில் எழுதி வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு நூல் - (2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **"கூத்து நெஞ்சம்"** "நாடக நெஞ்சம், **வில்லிசை** நெஞ்சம், **கிராமிய நடனங்கள்"** ஆகிய நூல்களை வெளியிடவுள்ளதாகவும். இதற்கான அனுசரணையினை நிதிவளம் படைத்தோர் வழங்கினால் விரைவில் வெளியிட முடியும் என்ற ஆதங்கத்தினைத் **"தென்றல்"** ஊடாக விடுப்பதாகவும் சிரேஷ்ட எழுத்தாளர் மூனாக்கானா தெரிவித்தார்.

**பெற்ற விருதுகள்**

1. மட்டக்களப்புக் கலாசாரப் பேரவை வழங்கிய **"கலைமணி விருது"**.
2. இந்து கலாசார அமைச்சு வழங்கிய **"கலாபூஷணம் விருது"**.
3. மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை பொன்விழாவில் வழங்கிய **"மக்கள் கவிமணி விருது"**.
4. மட்டக்களப்பு கல்விச் சமூகத்தினால் நடத்தப்பட்ட விழாவில் வழங்கப்பட்ட **"கலையரசு விருது"**.
5. கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினால் வழங்கப்பட்ட **"தலைக்கோள் விருது"**,
6. கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட **"ஆளுனர் விருது"**.
7. மண்முனைப் பிரதேசத்தில் முதலாவது சிரேஷ்ட பிரஜையாகவும். மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது சிரேஷ்ட பிரஜையாகவும் தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார்.

**சமூக சேவைகள்**


1. வகுப்புக் கலவர காலத்தில் மட்டக்களப்பு - அம்பாறை பிரஜைகள் குழு உறுப்பினராகக் கடமையாற்றியமை.
2. கண்டியில் ஆசிரியராகப் பணியாற்றும்போது மத்திய மாகாணத் தமிழ்ச் சங்க முன்னாள் உறுப்பினர்.
3. ஆரையம்பதி பொது நூலகத்தின் வாசகர் வட்டத் தலைவர்.
4. வீட்டுக் கை வைத்தியம், சோதிடம் சம்பந்தமான ஆலோசனை வழங்கல்.

இவ்வாறாகத் தனது 91 ஆவது வயதிலும் எழுதிக் கொண்டிருக்கும் சிரேஷ்ட எழுத்தாளர் மூனாக்கானாவின் எழுத்தாக்கல் பணிகள் தொடர வேண்டுமெனத் **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதிப்பிள்ளை கிருஷ்ணப்பிள்ளை



மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற, வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும், தேனும் - பாலும் வடிந்தோடும், இனிய கிராமமான சந்திவெளியில் பிறந்த த.கிருஷ்ணபிள்ளையைத் (சந்தியூரான்) **"தென்றலின் தேடல்"**-வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"**-பெருமையும், பேருவகையும் அடைகிறது.

இவர் ஆசிரியராக, அதிபராக, கலை இலக்கியவாதியாக எனப் பல பரிமாணங்களில் தனது ஈடுபாட்டைச் சமூகத்தின் பால் செலுத்தியிருப்பதை- செலுத்திக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

### பாடசாலைக் காலம்

இவர் தனது கல்வியினை மட்/ககு/சந்திவெளி மெ.இ.மி.பாடசாலை, மட்/ககு/சித்தாண்டி இ.கி.மி.பாட சாலை, மட்/ககு/வந்தாறுமூலை மத்திய கல்லூரி மற்றும் மட்/மட்/கல்லடி- உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை ஆகியவற்றில் கற்றார்.

### தொழில்

தனது தொழிலை 1959 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகப், பயிற்றப்பட்ட ஆசிரியராக, அதிபராக எனப் பல்வேறு பரிமாணங்களில் கற்பித்தல் மற்றும் நிர்வாகத் திறமையால், பல கல்விமான்களை உருவாக்கி, 1996 ஆம் ஆண்டு தனது 37 வருடக் கல்விச் சேவையைப் பூர்த்தி செய்து, ஓய்வு பெற்றார்.

### பொதுச் சேவைகள்

- சைவத் தமிழ்ச் சொற்பொழிவாளர்.
- ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்.
- அகில இலங்கை இந்துமாமன்றப் பிரதிநிதி.
- கோறளைப்பற்று இந்து சமய அபிவிருத்தி சபைத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கல்வித் திணைக்கள கடன் வழங்கும் சபைச் செயலாளர்.
- ❖ மட்டக்களப்பு மாவட்ட பொருளாதார அபிவிருத்தி மன்றத் தலைவர்.
- ❖ வாழைச்சேனைப் பிரிவு வாசகர் வட்டச் செயலாளர்.
- ❖ கோறளை- தெற்குப் பென்சனியர் சங்கச் செயலாளர்.
- ❖ தமிழர் ஆசிரியர் சங்க கல்குடாக் கிளைச் செயலாளர்.
- ❖ மட்டக்களப்பு மாவட்ட இணக்க சபையின் உதவிச் செயலாளர்.
- ❖ சமாதான நீதவான்.
- ❖ இலங்கை தமிழரசுக் கட்சியின் தொண்டன்.
- ❖ உள்ளூர் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்.

**பாராட்டுக்களும், விருதுகளும்**

- ❖ பாடசாலைக் காலத்தில் கவிதை, நாடகம், பேச்சுப் போட்டிகளில் பரிசும், பாராட்டும் பெற்றுக் கொண்டமை.

- ❖ மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவையும், மாவட்டத் தமிழ்க் கலாமன்றமும் இணைந்து நடாத்திய கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

- ❖ மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றியீட்டியமைக்காகப் பாராட்டப் பட்டதோடு, **"செந்தமிழ் திலகம் விருது"**- வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

- ❖ மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று, கோறளை- தெற்கு கலாசாரப் பேரவைகள் நடத்திய கவிதை, கட்டுரை மற்றும் கலை- இலக்கியப் போட்டிகளில் பரிசும், பாராட்டும் பெற்றமை.

இவ்வாறாகத் தனது ஆசிரியர், அதிபர் தொழிலோடு இணைந்ததாக கலை, இலக்கியச், சமூகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தவர், தற்போது முழுதாகவே தன்னை கலை, இலக்கிய, சமூகப் பணிகளில் இணைத்துக் கொண்டு, பெரும் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில் த.கிருஷ்ணபிள்ளையின் பணிகள் எதுவித தங்கு தடையுமின்றி முன்கொண்டு செல்லப்பட அனைவரும் தமது பங்களிப்பை நல்க வேண்டுமெனத் **"தென்றல்"**-வேண்டிக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதியில்......

அழகிய 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம் தங்க நகைகளின் சொர்க்காபுரி



அபிராமி ஜுவல்ஸ்

பிரதான வீதி,
ஆரையம்பதி – 02
தொ.பே: 065–2246944
077–6506329

AD/0008

அழகிய 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம் தங்க நகைகளின் சொர்க்காபுரி



சொர்ணம் நகை மாளிகை

16, புனித அந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152

212, 214 பிரதான வீதி, கல்முனை.
T.P: 067 2229121/2229860


59, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
T.P: 067 2220191

182, பிரதான வீதி, களுவாஞ்சிகுடி
T.P :- 065 2250182

AD/0040

LADSHANA
STAMP & DIGITAL PRINTING

AD / 0024




Rubber Stamps | Digital Printing | T.Shirt (Sublimation & Emproding) | Laser Cutting & Engraving
Digital Offset | Plastic ID | Shield | Mug (Personalized Gift Printing) | Wedding Card Est....

39A, BAILY ROAD, ARASADY, BATTICALOA.
ladshana@gmail.com 065 2224048, 077 6915574



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Online Learning மிக இலகுவானது...



## Onlineயில் ஆங்கிலம் கற்பது ஏன் சிறந்தது?

- சக மாணவர்களைப் பற்றிய எண்ணமோ, வெக்கமோ இல்லை
- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்
- Self Disciplineஐ மேலும் விருத்தி செய்யும் வாய்ப்பு
- உயர்கல்விக்கான புதிய தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- ஆசிரியருடன் நேருக்குநேர் கதைக்கும் வசதி
- பயணம் மற்றும் நேரவிரயம் இல்லை
- Video மற்றும் Audio வசதிகளுடன் கூடிய வகுப்புகள்
- இலகுவானதும் வசதியானதும்

A/D 0006

## Headway School of Languages

12, Thamaraikerny Road, Arasady, Batticaloa

T: 065 492 4042 | 065 222 5612 | 070 334 4448 | 070 334 4445

WWW.headway.lk

எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட், மட்டக்களப்பு. 065 2222607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org